REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 செப்டெம்பர் 2 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්
வரு. 91 இல. 208 | Saturday 02, September, 2023 | 10 பக்கங்கள் | 50/-

## தங்கத்தின் விலையில் நேற்று திடீர் வீழ்ச்சி

**24 கரட் பவுண் ரூ. 1,75,500ஆக பதிவு**




இலங்கையில் கடந்த சில நாட்களாக அதிகரித்திருந்த தங்கத்தின் விலையில் நேற்று திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கமைய நேற்று முன்தினம் (31) ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 6,21,995 ரூபாவாக பதிவாகியிருந்தது. 06

இந்திய பாதுகாப்பு அமைச்சர்

## ஸ்ரீ ராஜ்நாத் சிங் இன்று இலங்கைக்கு வருகிறார்

**இந்திய தூதரகம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு**



இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் சிங் இன்று (02) இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இலங்கை வருகிறார்.

இரு நாடுகளுக்கிடையேயான இரு தரப்பு பாதுகாப்பு உறவுகள் தொடர்பான மீளாய்வுக்காக இன்று 2ஆம் திகதி வரும் அவர், நாளை 3ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்.

அவரது இந்த விஜயத்தின் போது அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 06

அமெரிக்காவில்

## இந்து பாரம்பரிய மாதமாக ஒக்டோபர் மாதம் அறிவிப்பு

அமெரிக்காவில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் வசித்துவரும் நிலையில், ஒக்டோபர் மாதம் இந்து பாரம்பரிய மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 06



## எரிபொருள் QR நடைமுறை நேற்று முதல் நீக்கப்பட்டது

**மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன அறிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எரிபொருள் விற்பனையின் போது எரிபொருள் நிலையங்களில் கடந்த பல மாதங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த QR நடைமுறையை நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் நீக்குவதாக, எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த காலங்களில் நிலவிய டொலர் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து விநியோக நடவடிக்கைகளுக்கு வசதியாக இந்த 06

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கான உதவி வழங்கல்

# நன்கொடை திட்டங்களுக்கான இந்திய நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு

## சுமார் 50 வீதமாக உதவித்தொகையை அதிகரித்தது இந்தியா

**இந்திய உயர் பெறுபேற்று சமூக அபிவிருத்தி திட் (HICDP) கட்டமைப்பின் கீழ் தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் 09 திட்டங்களுக்குமான நிதி ஒதுக்கீடே அதிகரிப்பு**



இலங்கையின் பொருளாதார தோற்றப்பாடுகளில் காணப்படும் துரிதமான மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இந்திய அரசாங்கம் அதிகரித்துள்ளது.

அதன்படி, இலங்கை இந்திய உயர் பெறுபேற்று சமூக அபிவிருத்தி திட்டம் (HICDP) என்ற கட்டமைப்பின் கீழ் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 9 திட்டங்களுக்குமான இறுதி ஒதுக்கீடு 50 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பைத் தொடர்ந்து இந்த 9 திட்டங்களுக்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு 3 பில்லியன் இலங்கை ரூபாவை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏனைய பல்வேறு துறைகள் உட்பட கல்வி மற்றும் சுகாதாரம் முதல் விவசாயம் வரையிலான சகல துறைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த திட்டங்கள் காணப்படுகின்றன.

HICDP கட்டமைப்பின் கீழ் இலங்கையின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 60க்கும் அதிகமான நன்கொடை அடிப்படையிலான திட்டங்கள் இந்திய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக ஏனைய 20 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் உள்ளன. HICDP கட்டமைப்புக்காக இரு நாடுகளும் 2005ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு 5 வருட காலப்பகுதியிலுமாக இதுவரை 03 தடவைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 06

புதிய உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

## வெளிநாட்டு தூதுவர்களுக்கு தெளிவுபடுத்திய அரசாங்கம்

**அமைச்சர்களான விஜேயதாச, அலி சப்ரி தலைமை**



புதிய உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பாக நாட்டிலுள்ள அனைத்து வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மற்றும் இராஜதந்திர பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மற்றும் இராஜதந்திர பிரதிநிதிகளுடனான விசேட கலந்துரையாடலொன்று நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு 06



எரிபொருள் விலை அதிகரித்தாலும்

## முச்சக்கரவண்டி கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது

03

## வெலிக்கடை பொலிஸ் காவலில் இருந்த ராஜன் ராஜகுமாரியின் மரணம்

**மேலும் 03 பொலிஸார் கைது**

**11ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு**



வெலிக்கடை பொலிஸாரின் காவலில் இருந்த போது ராஜன் ராஜகுமாரி என்ற பணிப்பெண் உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மேலும் இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்கள் மற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 06

## பஸ் கட்டணம் நான்கு வீதத்தால் அதிகரிப்பு

**ஆகக் குறைந்த கட்டணத்தில் மாற்றமில்லை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பஸ் கட்டணம் 4 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் 06

கனடா அனுப்புவதாக கூறி

## வவுனியாவில் 6 பேரிடம் பண மோசடி செய்த ஒருவர் கைது



கனடாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து வவுனியாவில் 6 பேரிடம் பணம் மோசடி செய்த யாழ்ப்பாணம், நாவற்குழி பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை நேற்று முன்தினம் (31) வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். வவுனியாவில் பட்டக்காடு, திருநாவற்குளம், தவசிக்குளம், மல்லாவி உள்ளிட்ட 06

## நான்கு மாகாணங்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கும்

**வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறல்**



நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் தற்போது நிலவும் மழை நிலைமை எதிர்வரும் தினங்களில் மேலும் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக, வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை 06

**யாழில் கைத்தொழில் கண்காட்சி -2023**

## வடக்கின் உற்பத்திகளுக்கு தென் இலங்கையில் சந்தை வாய்ப்புகள்

**அமைச்சர்கள் டக்ளஸ், பத்திரண தலைமையில் நேற்று ஆரம்பம்**

வடமாகாணத்தின் கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளுக்கு தென்னிலங்கையில் சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தன்னுடைய முயற்சிகளுக்கு துறைசார் அமைச்சரான மருத்துவர் ரமேஷ் பத்திரண பூரணமான ஒத்துழைப்பை வழங்குவாரெனவும் தெரிவித்தார். 06



கெஹெலியவுக்கு எதிரான பிரேரணை;

## சபையில் 6,7,8 இல் விவாதம் 8ஆம் திகதி வாக்கெடுப்பு

**கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்வரும் வாரத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. 06


## எரிபொருள் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிப்பு

**CPC, IOC அறிவிப்பு**

எரிபொருட்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்தது. இதேவேளை, சிபெட்ஸ்கோ விலைக்கேற்ப ஐ.ஓ.சி. நிறுவனமும் எரிபொருள் விலையை அதிகரிப்பதாக அறிவித்துள்ளது.




இதற்கமைய ஒரு லீற்றர் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 13 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 361 ரூபாவாகும். ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 42 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 417 ரூபாவாகும். 06



காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள்;

## கிளிநொச்சி, பளையில் முறையற்ற விதத்தில் காணிகள் பகிர்ந்தளிப்பு

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் அம்பலமானது

03

## அநியாயம் நடக்கும்போது துணிந்து குரல் கொடுப்போம்

**முன்னேற்றத்தை அடைய வழி – கஜேந்திரகுமார் MP**



**ஓமந்தை விசேட நிருபர்**

"அநியாயம் நடக்கும் போது நாம் துணிந்து எங்களுடைய உரிமைக்காகவும் இருப்புக்காகவும் நாம் இறுக்கமாக இருந்தால், எமக்கான முன்னேற்றத்தை அடையலாமென" தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 06

வாகன இறக்குமதி தடையையடுத்து

## புதிய வாகன விற்பனையில் போலி ஆவணங்களுடன் மோசடி

**பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை**



சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட இரண்டு ஜீப் ரக வண்டிகள் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த போது, அவை குருநாகலில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. 06

## வெல்லம்பிட்டி ஆட்டோ சாரதி சுட்டுக் கொலை

**ஒரு ஆணும் பெண்ணும் பொலிஸாரால் கைது**



வெல்லம்பிட்டி, கித்தம்பஹுவ பிரதேசத்தில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவரை சுட்டுக் கொலை செய்த சம்பவமானது, டுபாய்க்கு தப்பிச் சென்றுள்ள பாரிய போதைப்பொருள் வர்த்தகரான புளுமெண்டல் ரவி என்பவரின் தலைமையில் இடம்பெற்றதாக, மேல் மாகாண தெற்கு குற்றப்பிரிவினர் தெரிவித்தனர். 06

## திமிங்கிலம் வாந்தி துண்டு வைத்திருந்த மூவர் கைது

**நெதகமுவவில் CIDயினர் அதிரடி**



646 கிராம் நிறை கொண்ட அம்பர் 3 துண்டுகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஓய்வு பெற்ற, அங்கவீனமுற்ற இராணுவ வீரர் உட்பட மூவர் நெதகமுவ, கெஹல்பத்தர பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திமிங்கிலங்களின் வாந்தியெனக் கூறப்படும் அம்பர் துண்டுகளை இவர்கள் வைத்திருந்ததாக, கம்பஹா 06

# சர்வதேச செய்திகள்

அமெரிக்க பாராளுமன்ற கலவரம்:

## தீவிர வலதுசாரி தலைவருக்கு 17 ஆண்டுகள் சிறை தண்டனை



அமெரிக்க பாராளுமன்ற கலவரத்தில் ஈடுபட்ட தீவிர வலதுசாரி அமைப்பான 'பிரௌட் போய்ஸ்' குழுவின் தலைவருக்கு 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த கலவரம் தொடர்பில் வழங்கப்பட்ட மிகப்பெரிய தண்டனையாக இது உள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் முன்னாள் வீரரான 38 வயது ஜோ பிக்ஸ் 2021 ஜனவரி 6 இல் கலவரக்காரர்கள் பாராளுமன்றத்திற்குள் நுழைய தூண்டுதலாக இருந்தார் என்று அரச வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இவர் கடந்த மே மாதத்தில் தேசத்துரோகம் மற்றும் மற்ற குற்றச்சாட்டுகளில் குற்றங்காணப்பட்டார்.

நேற்று முன்தினம் (31) அவர் நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்டதோடு தனது செயலுக்காக வருத்தம் தெரிவித்தார். அமெரிக்க மாவட்ட நீதிபதி டிம்மித்தி கெல்லி இந்தத் தண்டனையை வழங்கினார்.

மற்றொரு பிரௌட் போய்ஸ் குழு உறுப்பினரான சக்கரி ரெஹலுக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரும் தேசத்துரோக குற்றச்சாட்டுக்கு உள்ளானார்.

2020 ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் டிரம்ப் தோல்வி அடைந்ததை அடுத்தே தீவிர வலதுசாரிகள் அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்தை தடுக்கும் வகையில் 2021 ஜனவரி 6ஆம் திகதி கலவரத்தில் ஈடுபட்டனர்.

இந்த கலவரம் தொடர்பில் 1,100க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு கலவரத்தில் ஈடுபட்டது தொடர்பில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. இதுவரை 110 தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டிரம்ப் வழக்கு விசாரணை யூடியுபில் நேரடி ஒளிபரப்பு



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் அவரது சக பிரதிவாதிகள் மீதான ஜோர்ஜிய தேர்தல் மோசடி வழக்கின் நீதிமன்ற நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்பப்படும் என்று நீதிபதி ஒருவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை யூடியுப் தளத்தில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும் என்று புல்டன் கவுன்டி உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்கொட் மக்கபீ தெரிவித்துள்ளார்.

2020 ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை மாற்ற சதி செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட 19 பேரில் டிரம்பும் அடங்குகிறார். எனினும் தன் மீதான குற்றச்சாட்டை டிரம்ப் மறுத்துள்ளார். அவர் அடுத்த வாரம் நீதிமன்றத்தில் தோன்றவுள்ளார்.

முன்னதாக கடந்த வாரம் புல்டன் கவுன்டி சிறையில் சரணடைந்த டிரம்பை கைதிகளுக்கான புகைப்படம் எடுக்கப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தான் எந்த தவறும் செய்யவில்லை என்று தொடர்ந்து கூறி வரும் டிரம்ப் இந்த வழக்கு அரசியல் நோக்கம் கொண்டது என்று குறிப்பிட்டுள்ளார். டிரம்ப் மீது மொத்தமாக 13 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. 2020 ஜனாதிபதி தேர்தலில் ஜோர்ஜிய மாநிலத்தின் முடிவுகளை மாற்ற அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் அவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் முன்னணி வேட்பாளராக போட்டியிட டிரம்ப் திட்டமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவின் வரைபடத்திற்கு பல நாடுகளும் எதிர்ப்பு




சீனா வெளியிட்ட புதிய வரைபடத்தை இந்தியாவைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளும் நிராகரித்துள்ளன.

சீனா தங்கள் பிரதேசத்தை உரிமை கொண்டாடுவதாகக் குறிப்பிட்டுள்ள இந்த நாடுகள், எல்லைகளை தவறாகச் சித்தரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன. கடந்த திங்கட்கிழமை (28) சீனா வெளியிட்ட புதிய வரைபடத்தில் அருணாச்சலப் பிரதேசத்தின் குறிப்பிட்ட பகுதிகள், அக்சாய் சின் உள்ளிட்ட இந்தியப் பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

மேலும் பிலிப்பைன்ஸ் கடல் பகுதி, தென்சீனக் கடலில் குறிப்பிட்ட பகுதிகளும் இணைக்கப்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்த புதிய வரைபடத்தில் எந்த அடிப்படையும் இல்லை என்று மறுத்துள்ள இந்திய வெளியுறவுதுறை அமைச்சகம் அதனை ஏற்க மறுத்துவிட்டது.

அதேபோன்று தென் சீனக் கடற்பகுதியில் சீனா கோரும் உரிமைகளை அங்கீகரிக்கப் போவதில்லை என்று மலேசியா தெரிவித்துள்ளது. சீனாவின் அண்மைய வரைபடத்தைக் குறிப்பிட்டு மலேசிய வெளியுறவு அமைச்சு இவ்வாறு கூறியது.

மலேசியாவின் கடற்பகுதிகளையும் அந்த வரைபடம் உள்ளடக்கியிருந்தது. அது மலேசியாவைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை என்று அமைச்சின் அறிக்கை குறிப்பிட்டது.

மலேசியாவின் 1979ஆம் ஆண்டு புதிய வரைபடத்தின்படி, சபா, சரவாக் வட்டாரங்களின் சில பகுதிகளைச் சீனா உரிமை கோரியுள்ளது. தென் சீனக் கடல் விவகாரம் சிக்கலானது என்று மலேசிய வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டது.

மறுபுறம் தென் சீன கடலின் போட்டி நிலவும் பகுதிகள் சீனாவுக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதால் இந்த வரைபடத்தை ஏற்கப்போவதில்லை என்று பிலிப்பைன்ஸ் வியாழனன்று (31) தெரிவித்தது.

## வாகனத்தை மோதி தாக்குதல்: இஸ்ரேலிய வீரர் ஒருவர் பலி




ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பலஸ்தீனர் ஒருவரால் லொரியை மோதவிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் இஸ்ரேலிய படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன தரப்புகள் இடையே கடந்த இரண்டு தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு வன்முறை அதிகரித்துள்ள நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழன் இரவு நப்லுஸில் இஸ்ரேலிய துருப்புகளின் வாகனத் தொடரணி ஒன்றுக்கு அருகில் பலஸ்தீன போராளிகள் மேம்படுத்தப்பட்ட வெடிபொருளை வெடிக்கச் செய்திருப்பதோடு ஆடவர் ஒருவர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தியதாகக் கூறி ஜெருசலத்தில் 14 வயது பலஸ்தீன சிறுவன் ஒருவனை இஸ்ரேலிய படையினர் சுட்டுக் கொன்றனர்.

இந்நிலையில் இஸ்ரேலில் வேலை பார்க்க அனுமதி பெற்ற 41 வயது பலஸ்தீனர் ஒருவரே வாகனத்தை மோதவிட்டு தாக்குதல் நடத்தி இருப்பதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதன்போது வீதியோரத்தில் இருந்த இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் மீதே அவர் வாகனத்தை மோதவிட்டுள்ளார்.

தொடர்ந்து வாகனத்தை செலுத்திய அந்த பலஸ்தீனர் 6 கிலோமீற்றருக்கு அப்பாலிருக்கும் சோதனைச்சாவடி ஒன்றில் வைத்து இஸ்ரேலிய படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டில் இதுவரை மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலத்தில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூடுகளில் 180க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதே காலப்பகுதியில் பலஸ்தீனர்களின் தாக்குதல்களில் 33 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## பாக். தற்கொலை தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் பலி



பாகிஸ்தானின் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தாக்குதலில் இராணுவ வீரர்கள் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உடலில் வெடிபொருளைப் பிணைத்திருந்த மோட்டார் சைக்கிளோட்டி ஒருவர் இராணுவ வாகன அணிவகுப்பின் மேல் தனது மோட்டார் சைக்கிளை மோதியதாக பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகள் கூறினர்.

பன்னு மாவட்டத்தில், எல்லையிலிருந்து 61 கிலோமீற்றர் தொலைவில் கடந்த வியாழனன்று (31) இச்சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் ஈராண்டுகளுக்கு முன் தலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய பின் பாகிஸ்தானில் வன்செயல்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக எல்லைப் பகுதியில் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதைக் கவனிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பாகிஸ்தானில் செயல்படும் தலிபான் அமைப்பு, 'தெஹ்ரீக்–இ–தலிபான் பாகிஸ்தான்' குழு போன்றவை, பெரும்பாலும் எல்லைப் பகுதியில் இராணுவ கண்காணிப்பு இல்லாத இடங்களில் தாக்குதல்களை நடத்துகின்றன. தாக்குதல்தாரி இராணுவ லொரியின் மேல் மோதியதை பாகிஸ்தானிய அமைச்சர் பெரோஸ் ஜமால் ஷா, ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திடம் உறுதிப்படுத்தினார்.

இச்சம்பவத்தில் மேலும் ஐந்து இராணுவ வீரர்கள் காயமடைந்ததாக பாகிஸ்தானிய இராணுவம் தெரிவித்தது. ஆனால் 20 பேர் காயமடைந்ததாக அமைச்சர் ஷா கூறினார்.

இந்தத் தாக்குதல் 'கோழைத்தனமான பயங்கரவாத நடவடிக்கை' என்று பாகிஸ்தானின் இடைக்கால பிரதமர் அன்வார் உல் ஹக் கக்கர் குறிப்பிட்டார்.

அந்த வட்டாரத்தில் டி.டி.பி குழு மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறது. அதன் போராளிகள் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பாகத் தஞ்சம் புகுந்துள்ளதாக இஸ்லாமாபாத் கூறுகிறது.

அண்மைய மாதங்களில், இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எதிராக டி.டி.பி குழு பிரசாரம் மேற்கொண்டு வருகிறது.

## ஆபிரிக்க ஒன்றியத்தில் இருந்து கபோன் நீக்கம்



இராணுவ சதிப்புரட்சி இடம்பெற்ற கபோன் நாட்டின் அங்கத்துவத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்துவதாக ஆபிரிக்க ஒன்றியம் அறிவித்துள்ளது.

கபோன் குடியரசில் அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியதை கடுமையாகக் கண்டிப்பதாக ஆபிரிக்க ஒன்றியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பு கௌன்சில் ட்விட்டரில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

கபொன் நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்த கௌன்சில் அவசரமாகக் கூடியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கபோனில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சர்ச்சைக்குரிய தேர்தலில் பதவியில் உள்ள ஜனாதிபதி அலி பொங்கோ ஒன்டிம்பா வெற்றி பெற்ற நிலையிலேயே கடந்த புதனன்று இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.

கபோனில் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சியானது 2020 தொடக்கம் பிராந்தியத்தில் இடம்பெறும் எட்டாவது இராணுவ சதிப்புரட்சியாக அமைந்தது.

## மகளை கொன்று சமைத்த தாயார் பிரேசிலில் கைது



பிரேசிலில், பெற்ற மகளைக் கொன்று உடலைத் துண்டு துண்டாக வெட்டி சமைத்த கொடூர மனம் படைத்த தாயாரை பொலிஸார் கைது செய்தனர்.

கணவரை பிரிந்த ரூத் புளோரியானோ 9 வயது மகள் மற்றும் ஆண் நண்பருடன் சௌ பவுலோ நகரில் வசித்துவந்தார்.

கடந்த வாரம் வீட்டிற்கு வந்த ஆண் நண்பரின் தாயார், குளிர்சாதனப் பெட்டியில் வெட்டப்பட்ட உடல் பாகங்கள் இருந்ததை கண்டு பொலிஸ் நிலையத்திற்கு தகவல் அளித்தார்.

இது தொடர்பாக புளோரியானோவிடம் பொலிஸார் விசாரணை நடத்தியபோது, கணவரை விவாகரத்து செய்ததால் மகள் அடிக்கடி தன்னுடன் சண்டையிட்டு வந்ததாகவும், கடந்த 8ஆம் திகதி போதையில் மகளை கத்தியால் குத்தி கொன்றதாகவும் ஒப்புக்கொண்டார்.

சடலத்தை அப்புறப்படுத்துவது எப்படி என இணையத்தில் தேடிய புளோரியானோ, உடலைத் துண்டு துண்டாக வெட்டி குளிர்சாதனப் பெட்டியில் வைத்து, கொஞ்சம் கொஞ்சமாக சமைத்து அவற்றை அப்புறப்படுத்தி வந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

## அட்லான்டிக் பெருங்கடலை கடந்த அரிய வகை ஆமை



அட்லான்ட்டிக் பெருங்கடலைத் தாண்டி பிரிட்டனின் வேல்ஸில் கரையொதுங்கிய கடல் ஆமை மீண்டும் அமெரிக்காவின் டெக்சஸ் மாநிலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டேலி எனும் அந்த அரிய வகைக் கடல் ஆமை வேல்ஸின் டாலக்கா கடற்கரையில் கரையொதுங்கியது. அது ஆங்கிள்சி கடல் விலங்குத் தோட்டத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது.

அங்கு அதன் உடல்நிலை கவனித்துக்கொள்ளப்பட்டதாக தி கார்டியன் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. அது ஆணா, பெண்ணா என்பது சரியாகத் தெரியவில்லை.

டேலி, அமெரிக்காவைச் சென்றடைந்ததும் ஹூஸ்டன் விலங்குத் தோட்டத்திற்குக் கொண்டுசெல்லப்படும். மீண்டும் கடலில் விடுவதற்கு அது ஆரோக்கியமாக உள்ளதா என்பது அங்கு சோதிக்கப்படும்.

கடல் ஆமைகளிலேயே இந்த வகை ஆமை மிகச் சிறியதாகும். அவை சுமார் 61 சென்ட்டிமீற்றர் வரை வளரக்கூடியவை. அவற்றின் எடை 45 கிலோகிராம் வரை இருக்கும்.

உலகிலேயே அழிந்துபோகும் அபாயத்தை அதிகம் எதிர்நோக்கும் கடல் ஆமை வகைகளில் இதுவும் ஒன்றாகும்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 2 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.47
ளுஹர் - 12.12
அஸர் - 03.16
மஃரிப் - 06.18
இஷா - 07.28

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் ஆவணி 17
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு அமைச்சர் பந்துல கண்காணிப்பு விஜயம்!

**கல்லடி குறூப் நிருபர்**

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று முன்தினம் மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டதுடன், ரயில் நிலையத்தையும் அவர் பார்வையிட்டார்.

அத்துடன், மட்டக்களப்பு ரயில் நிலைய அதிகாரிகளுடனும் அமைச்சர் பந்துல குணவர்தன கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது, மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் நிலவும் குறைபாடுகளை அமைச்சர் கேட்டறிந்துகொண்டதுடன், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் மட்டக்களப்பு ரயில் நிலைய அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும், ரயில் பாதைகளுக்கான அபிவிருத்தி மற்றும் புதிய ரயில் சேவைகளை எதிர்காலத்தில் அறிமுகம் செய்வது தொடர்பாகவும் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.



இந்தக் கண்காணிப்பு விஜயத்தின் போது நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கமலத், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பூ.பிரசாந்தன், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் இணைப்பு செயலாளர் மாணிக்கவாசகர் தயாபரன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

எரிபொருள் விலை அதிகரித்தாலும்

## முச்சக்கரவண்டி கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது



எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டபோதிலும், முச்சக்கரவண்டி பயணக் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாதென, அகில இலங்கை முச்சக்கரவண்டியாளர் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

கட்டண அதிகரிப்பானது, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள மக்களை மேலும் அசௌகரியப்படுத்தக் கூடுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதனை கருத்தில் கொண்டு முச்சக்கர வண்டிக்கான பயணக் கட்டணத்தை அதிகரிக்கப் போவதில்லையெனவும், அவர் மேலும் தெரவித்தார்.

## பளையில், தெங்கு செய்கையாளர்களுக்கு இன்று பயிற்சிநெறி

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தெங்கு உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதுடன், தெங்குச் செய்கையில் ஆர்வம் உடையவர்களுக்கு மானிய அடிப்படையில் தென்னங்கன்றுகள் மற்றும் உரம் வழங்கவுள்ளதாக, தென்னை அபிவிருத்தி சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் தேவராசா வைகுந்தன் தெரிவித்தார்.

அத்துடன் பளை, தர்மங்கேணி பிரதேசத்தில் தெங்கு அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் இன்று காலை 9.00 மணிக்கு (02) பயிற்சி வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது, தற்போது வடமாகாணத்தில் தெங்குச் செய்கை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் இதை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு பகுதிகளிலும் தெங்குச் செய்கையை மேற்கொள்ள உள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள்;

## கிளிநொச்சி, பளையில் முறையற்ற விதத்தில் காணிகள் பகிர்ந்தளிப்பு

**தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் அம்பலமானது**

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் முறையற்ற வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விடயம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முகமாலை தோட்டம், கனகரஞ்சன் தோட்டம், கிராஞ்சிகுளக்கரை காணி ஆகிய மூன்று இடங்களில் கடந்த 2010ஆம் ஆண்டுக்கு பின்னர் 211 ஏக்கர் காணிகள் 53 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக காணி சீர்த்திருத்த ஆணைக்குழு, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினூடாக விபரங்கள் கோரிய ஊடகவியலாளருக்கு பதிலளித்துள்ளது. ஆனால், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் யுத்தத்துக்கு முன்பிருந்து இக்காணிகளிலும் மற்றும் காணிகளின்றியும் ஏராளமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற சூழலில், அவர்களால் நீண்டகாலமாக காணிகளை தமக்கும் வழங்குமாறும், காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கமைவாக காணியை பயன்படுத்துவோமென தெரிவித்தும், அந்த மக்களுக்கு இதுவரை காணிகள் வழங்கப்படவில்லையென, பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பல தடவைகள் அந்த பிரதேச மக்கள் பல போராட்டங்களை நடத்தியிருந்தனர், அத்தோடு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளெனப் பல தரப்பட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு சென்றும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனவும், அப்பிரதேச மக்கள் மேலும் தெரிவித்தனர்.

## மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



தற்போது நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தின் மத்துகம, புலத்சிங்கள மற்றும் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கேகாலை மாவட்டத்தின் தெரணியகல, புலத்கொஹுபிட்டிய, யட்டியந்தோட்டை, தெஹியோவிட்ட மற்றும் ருவன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இன்று இரவு 8:00 மணிவரை இந்த எச்சரிக்கை அமுலில் இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தின் எஹெலியகொட மற்றும் குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாறைகளின் சரிவுகள் மற்றும் மண்சரிவுகள் தொடர்பாக பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

## கொழும்பை வந்தடைந்த இந்தியாவின் 'டெல்லி' கப்பல்

**ஸாதிக் ஷிஹான்**

இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ். 'டெல்லி' எனும் கப்பல் சம்பிரதாயபூர்வமான பயணத்தை மேற்கொண்டு நேற்றுக் (01) காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதுடன், இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினர் வரவேற்றுள்ளனர்.

163.2 மீற்றர் நீளமுடைய இந்தக் கப்பலில், இந்திய கடற்படை அதிகாரி கெப்டன் அபிஷேக்குமார் கட்டளை அதிகாரியாக பணியாற்றுகின்றார். அத்துடன், 450 பேர் கொண்ட குழுவினரும் இந்தக் கப்பலில் பணியாற்றுகின்றனர்.


இந்திய கடற்படை அதிகாரி கெப்டன் அபிஷேக்குமாருக்கும் இலங்கை மேற்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வாவுக்கு மிடையே மேற்கு கடற்படைத் தளத்தில் நேற்றுக் காலை சந்திப்பொன்றும் நடைபெற்றது.



இந்தக் கப்பல் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் இரு கடற்படையினருக்குமிடையே ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் மேம்படுத்தும் நோக்கில் இலங்கை கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இதன்போது, பயிற்சி பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சி நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை மாணவர்களின் வருகைக்காகவும் இந்தக் கப்பல் காத்திருக்கின்றது.

## அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவியின் அரங்கேற்றம்



அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவி ரிஷிகேஷா செம்பையாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 9ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு பிஷொப்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரன், டாக்டர் ராஜ்குமார் பாரதி பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் சமூக சேவையாளர், மனிதநேயம் நம்பிக்கை நிதியம் மற்றும் இலங்கை நுண்கலைக் கல்லூரி அமைப்பாளர் அபிராமி கைலாசபிள்ளை முதன்மை விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

'பொன்னியின் செல்வன் புகழ்' கீர்த்தனா வைத்தியநாதன், ஈஸ்வர் ராமகிருஷ்ணன்,

முனைவர் குரு பரத்வாஜ் ஆகியோரின் இசை பங்களிப்பில் கிருஷ்ணன் வெங்கடேஷின் ஒளி அமைப்பில் 'நாயகி' தயாரிப்பு அரங்கேறவுள்ளது.

## யாழில் போதைக் கடத்தலுக்காக மாற்றி அமைக்கப்பட்ட வாகனத்துடன் ஐவர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் கடத்தலுக்கு மிகவும் சூட்சுமமான முறையில் மாற்றியமைக்கப்பட்ட கப் ரக வாகனமொன்று, ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் ஒன்றரை கோடி ரூபா பணத்துடன் 5 சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். உரும்பிராய் பிரதேசத்தில் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமையில் பொலிஸார், கடற்படையினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து தேடுதலை முன்னெடுத்தனர்.

இதன்போது, சந்தேகத்துக்கிடமான மேற்படி கப் ரக வாகனத்தை சோதனையிட்ட போது, அவ்வாகனத்தின் கீழ் மேலுமொரு பெட்டி அடிக்கப்பட்டு, போதைப்பொருள் கடத்தலுக்கு ஏதுவாக வாகனம் மாற்றியமைக்கப்பட்டமையை கண்டறிந்தனர். இந்நிலையில், அவ்வாகனத்தில் பயணித்த இருவரை கைது செய்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் ஏனைய 3 சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளதாக, கடற்படையினர் தெரிவித்தனர்.

உரும்பிராய், மாதகல், ஊவா மாகாணத்தின் குடாஓயா ஆகிய பிரதேசங்களை இச்சந்தேகநபர்கள் சேர்ந்தவர்களாவர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர்களை கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும், கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

கச்சதீவு மீட்பு விவகாரத்தில்

## மத்திய அரசு கொள்கை முடிவில் நீதிமன்றம் தலையிட முடியாது

**மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவு**

**திருச்சி எம். கே. ஷாகுல்**




கச்சதீவு மீட்பு விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாதென்று மதுரை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபூர்வாலா குமரப்பன் அமர்வில் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

மதுரை உயர் நீதிமன்ற கிளையில் சென்னை மீனவர்கள் நலச்சங்கத்தை சேர்ந்த பீட்டர் ராயன் அண்மையில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில் அவர் தெரிவித்திருந்ததாவது,

"இந்தியா சுதந்திரமடைந்த பின்னர், கச்சதீவு இராமேஸ்வரத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1974ஆம் ஆண்டு இந்தியா மற்றும் இலங்கைக்கிடையே ஏற்பட்ட உடன்படிக்கைக்கமைய, கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்துக்கமைய, பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களை இந்தப் பகுதியில் தொந்தரவு செய்யக் கூடாதென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், அந்த உடன்படிக்கையை மீறும் வகையில் கடந்த 1983ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டுவரை இந்திய மீனவர்கள் 378 பேர் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கடந்த 19ஆம் திகதி கச்சதீவு பகுதியில் 9 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து விடுவித்தனர். 2 நாட்களுக்கு முன்னர் 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

## ஆந்திராவிலிருந்து இலங்கைக்கு தூத்துக்குடியூடாக கஞ்சா கடத்தல்

**இலங்கை பிரஜை உட்பட 16 பேர் கைது**



ஆந்திராவிலிருந்து தூத்துக்குடி வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் இலங்கை பிரஜை ஒருவரும் பாட்டாளி மக்கள் கட்சியின் பிரமுகர்கள் உள்ளிட்ட 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து 228 கிலோகிராம் கேரள கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடியிலிருந்து படகு மூலம் இலங்கைக்கு கஞ்சா அதிகளவில் கடத்தப்படும் நிலையில், அதனை தடுப்பதற்காக மதுவிலக்கு அமுலாக்க பிரிவினரால் தனிப்படையை அமைத்து சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டதாக, இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், கடந்த 28ஆம் திகதி மாலை தூத்துக்குடி, புதூர்பாண்டியபுரம் சுங்கச்சாவடி அருகே நடத்தப்பட்ட வாகன சோதனையின் போது, 2 கார்களில் 50 இலட்சம் இந்திய ரூபா பெறுமதியான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, 2 கார்களிலும் பயணித்த பெண்கள் இருவர் உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டு நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, மேலும் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் நிர்வாகி ஒருவர், கஞ்சா கடத்தல் சம்பவங்களின் மூளையாக செயற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## கொழும்பில் 3,000 சட்டவிரோத சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது



கொழும்பு, பஞ்சிகாவத்தை பிரதேசத்தில் பொலிஸாருடன் இணைந்து கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, 3,000 வெளிநாட்டு சிகரெட்டுகளை ஏற்றிச் சென்ற வானொன்றுடன், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடற்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, கரையோர பொலிஸாருடன் இணைந்து பஞ்சிகாவத்தையில் கடந்த செவ்வாயன்று (29) மாலை இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பஞ்சிகாவத்தை சந்தியில் பயணித்த சந்தேகத்துக்கிடமான மேற்படி வானை வழிமறித்துச் சோதனையிட்ட போது, அதில் சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் இருந்தமை இவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

மாத்தளை மனித புதைகுழி விவகாரம்

## ஐ.நா. அறிக்கையாளர் கடிதத்துக்கு பதிலளிக்குமாறு வலியுறுத்து

**வெளிவிவகார அமைச்சிடம் காணாமல் போனோர் குடும்ப ஒன்றியம் கோரிக்கை**

மாத்தளை மனித புதைகுழி தொடர்பாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்கள் நால்வரால் எழுதப்பட்ட கடிதத்துக்கு உரிய பதிலளிக்குமாறு வெளிவிவகார அமைச்சிடம் காணாமல் போனோர் குடும்ப ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

வருடம் தோறும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதியை சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது.

இதற்கமைய, இம்முறை 'அவர்களை நினைவு கூருவோம், அவர்களை மறக்க மாட்டோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் கடந்த புதனன்று (30) சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் கடைப்பிடிக்கப்பட்டதுடன், இதனையொட்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கவனயீர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை உள்ளடக்கி தெற்கில் இயங்கிவரும் அமைப்பான காணாமல் போனோர் குடும்ப ஒன்றியம், சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டி நேற்று முன்தினம் (31) கொழும்பில் அமைந்துள்ள நீதியமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சிடம் இருவேறு மகஜர்களை கையளித்தது.

மேற்குறிப்பிட்ட அமைச்சுகளின் அதிகாரிகளிடம் இம்மகஜர்களை காணாமல் போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ கையளித்தார்.

வெளிவிவகார அமைச்சிடம் கையளிக்கப்பட்ட மகஜரில், மாத்தளை மனித புதைகுழி தொடர்பாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்கள் நால்வரால் எழுதப்பட்ட கடிதத்துக்கு பதில் வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 17ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 16

### குறள் தரும் சிந்தனை



இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து

மாறுபாடு கொண்டு எதிர்ப்பதால் வெற்றி பெறுவது எளிது என எண்ணிச் செயல்படுபவரின் வாழ்க்கை விரைவில் தடம்புரண்டு கெட்டொழியும்.

## மாணவர்களின் எதிர்காலநலனை ஆசிரியர்கள் மறந்து விடலாகாது!

ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சில தொழிற்சங்கங்கள் தற்போது முழுநேர அரசியல் அமைப்புகளாக மாறி விட்டதைக் காண முடிகின்றது. அத்தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் ஊடக சந்திப்புகளை நடத்தி ஆக்ரோஷமாகக் குரல் எழுப்புகின்றனர். முன்னரெல்லாம் ஆசிரியர்களின் சம்பள உயர்வு பற்றி மாத்திரமே குரலெழுப்பிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தற்போது ஆசிரியர்களைப் பற்றி அதிகம் பேசுவதைக் காண முடியவில்லை.

ஆசிரியர்களுக்கான வேதனத்தை அதிகரிப்பது பற்றி மாத்திரமே தொழிற்சங்கங்கள் குரல் எழுப்புகின்றன. மாணவர்களின் கல்வி நலன்கள் தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அக்கறைப்படுவதைக் காண முடியவில்லை. ஆசிரியர் தொழிற்சங்க முக்கியஸ்தர்கள் சிலர் ஆக்ரோஷமாகப் பேசுகின்றனர். அரசுக்கு எதிராக சவால் விடும் வகையில் அவர்கள் நாகரிகமற்ற வித்தில் கருத்துகளை வெளிவிடுகின்றனர்.

அவர்கள் இவ்விதம் மாணவர்களின் நலன்களில் அக்கறையில்லாமல் செயற்படுவது பெற்றோர் மத்தியில் பெரும் வேதனையையே ஏற்படுத்தியுள்ளது. ஆசிரியர்களின் வேதனப் போராட்டம் காரணமாக தங்களது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டு விடுமோ என்பதுதான் பெற்றோரின் கவலையாகும்.

ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று ஆசிரிய தொழிற்சங்கங்கள் சிலவற்றின் தலைவர்கள் வெளிப்படையாகக் குரலெழுப்புகின்றனர். அவர்கள் உண்மையிலேயே ஆசிரியர்களின் நலனுக்கான தொழிற்சங்கத் தலைவர்களா அல்லது அரசியல்வாதிகளா என்பதைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கின்றது.

ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஆசிரியர்களின் நலன்களை மாத்திரமே பேசுவது முறையல்ல. பாடசாலை ஆசிரியர்களை மாத்திரமே நம்பியிருக்கின்ற வறிய மாணவர்கள் நாட்டில் ஏராளமாக உள்ளனரென்பதை ஆசிரிய தொழிற்சங்கங்கள் மறந்து விடலாகாது. அம்மாணவர்கள் இலவசக் கல்வியை மாத்திரமே நம்பியிருக்கின்றனர். தனியார் ரியூஷன் வகுப்புகளுக்குச் செல்வதற்கு அம்மாணவர்களின் பெற்றோரிடம் பணம் கிடையாது.

அரசாங்கப் பாடசாலைகளை மாத்திரம் நம்பியே அப்பெற்றோர் தங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். இலவசக் கல்வியின் தந்தையெனப் போற்றப்படுகின்ற கன்னங்கரா அவர்களின் குறிக்கோளும் அதுவாகவே இருந்தது. வறுமை காரணமாக நாட்டில் எந்தவொரு மாணவருக்கும் கல்வி வாய்ப்பு கிடைக்காமல் விடலாகாது என்பதுதான் கன்னங்கரா அவர்களின் எண்ணமாக இருந்தது.

அவ்வாறான இலவசக் கல்வி வாய்ப்பினாலேயே இன்றைய ஆசிரியர்கள் உருவாகினார்கள் என்பதையும் மறந்து விடலாகாது. இலவசக் கல்வியினால் உருவாகிய ஆசிரியர்கள், இன்று அவர்களை நம்பியிருக்கின்ற வறிய மாணவர்களுக்கு கல்வியை குறைவின்றி வழங்க வேண்டியது கடமையாகும்.

குறுகியகால விடுமுறைக்குப் பின்னர் ஒரு வார காலத்துக்கு முன்னர்தான் பாடசாலைகள் ஆரம்பமாகின. ஆசிரியர்கள் மீண்டும் வீதியில் இறங்கி போராடும் நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாதென்பதுதான் பெற்றோரின் வேண்டுதலாக இருக்கின்றது. பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் சீராக நடைபெற வேண்டுமென்பதுதான் பெற்றோரின் எண்ணமாக உள்ளது. அதேசமயம் க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளும் விரைவில் வெளிவரவிருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பொறுத்தவரை இதுவொரு முக்கியமான காலகட்டமென்பதை மறந்துவிடலாகாது.

அரசாங்க ஊழியர்கள் தங்களது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பணிப்பகிஷ்கரிப்பை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது நீதியும் தர்மமும் ஆகாது. இந்த விதியானது ஆசிரியர்களுக்கும் பொருந்தும். மாணவர்கள் பாதிக்கப்படாத விதத்திலேயே ஆசிரியர்கள் தங்களது பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு முற்பட வேண்டும். பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகளின் அவநம்பிக்கையைச் சம்பாதிக்கும்படியாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் நடவடிக்கையில் ஈடுபடுவது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். ஆசிரிய தொழிற்சங்கங்கள் இதனை உணர்ந்து கொள்வது அவசியம்.

தங்களையே நம்பி வந்துள்ள வறிய மாணவர்களின் நலன் மீது மிகுந்த அக்கறை கொள்ள வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகின்றது.

இன்றைய நெருக்கடி நிலைமையில் இலங்கைக்குத் தேவையானது அரசியல் அல்ல! இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் அரசியல் ஆதாயம் பற்றியும், பட்டம் பதவி பற்றியும் ஆசிரிய தொழிற்சங்கத்தினர் எவரேனும் ஆசை கொள்வார்களானால் அது தவறாகும். அவ்வாறு அவர்கள் இலக்கு வைத்திருப்பார்களானால் அதனைவிட சுயநல நோக்கம் வேறெதுவும் இருக்க முடியாது.

ஆகவே மாணவர்களின் நலன் மீது மிகுந்த அக்கறை கொண்டு ஆசிரிய தொழிற்சங்கங்கள் பணியாற்ற வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகின்றோம்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையில் கடந்த வருடத்தை பார்க்கிலும் இவ்வருடம் முன்னேற்றத்தைக் காண்கிறேன்



**அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் அதிவணபிதா அருட்கலாநிதி சந்துரு பெர்னாண்டோவிடம் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே தெரிவிப்பு**

'இலங்கையில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் சில முன்னேற்றங்களைக் காண்கின்றேன். நீங்களும் நானும் நாம் எல்லோரும் ஒரு கிறிஸ்தவ சமூகமாய் தொடர்ந்து இந்த நாட்டுக்காக பிராத்தனை செய்ய வேண்டும்' என பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவணபிதா அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோ பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவேயை கொழும்பில் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார்.

இதன்போதே பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, "நாட்டுத் தலைவருக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும். கடந்த மாதங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சென்றிருந்தேன். அங்கு மக்கள் அலை அலையாய் வந்து என்னிடம் கூறியது ஒன்றே ஒன்றுதான்.

'கடந்த 30 வருட யுத்தத்தில் என் மகனை இழந்தேன், என் குடும்பத்தை இழந்தேன். அவர்களை மீண்டும் பெற்றுத் தாருங்கள்' என்று அவர்கள் கதறினார்கள்.

'நீங்கள் கடவுளை நோக்கிப் பாருங்கள். கடவுள் உங்களுக்கு வெற்றியைத் தருவார். நானும் உங்களுக்காகப் பிராத்தனை செய்கின்றேன்' என்று அவர்களிடம் கூறினேன்.

கிறிஸ்தவ சமூகமாய் நீங்களும் நானும் தொடர்ந்து இந்த நாட்டுக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும். நாட்டை ஆட்சி செய்கின்ற தலைவர்களுக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும் என கிறிஸ்தவ மதம் மிகவும் தெளிவாக கூறுகிறது. கடவுள் அவர்களுக்கு நல்ல ஞானத்தை கொடுக்க வேண்டும் என்று தொடர்ந்து பிரார்த்தனை செய்வோம்.

நீங்கள் பல வெளிநாட்டு இராஜதந்திரிகளோடு நல்ல உறவைப் பேணி வருகின்றீர்கள். அதை நான் காண்கின்றேன்.

இலங்கையை முன்னேற்ற அவர்களது ஆலோசனையை பெற்றுக்கொண்டு நாம் எல்லோரும் சேர்ந்து இலங்கை நாட்டை கட்டி எழுப்புவோம்" என்று பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே இச்சந்திப்பின் போது மேலும் கூறினார்.

# Heritance Kandalama ஐச் சூழவுள்ள உயிர்பல்வகைமையை கொண்ட பசுமைமிகு சோலைவனம் மேலும் விஸ்தரிப்பு



**198 ஏக்கர் பாதுகாப்பு வனப்பிரதேசத்துக்கு மேலும் 13 ஏக்கர் சேர்ப்பு**

சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான அதன் நீண்ட கால அர்ப்பணிப்புக்கு ஏற்ப Heritance Kandalama வின் உயிர்பல்வகைமையைக் கொண்ட சோலைவனம் விஸ்தரிக்கப்படுகிறது. இம் மேம்பாட்டின் மூலம் மேலும் 13 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பு பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போது 211 ஏக்கர் வரையான நிலப் பரப்பு, பாதுகாப்பு வனப்பிரதேசமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், வனத்துறை பிரிவின் தற்போதுள்ள இயற்கை கையிருப்புடன் பாதுகாப்பான வனப்பிரதேசத்தை இது உருவாக்குகிறது.

இயற்கையின் அழகுணர்வைத் தழுவி ஏற்படுத்தப்பட்டுள்ள இம் மேம்பாடானது பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசத்தின் சொத்தான உயிர்ப்பல்வகைத் தன்மையின் நீடித்த நிலைப்பைப் பேணுவதுடன் இலங்கையின் மத்திய மாகாணத்தின் மத்தியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் ஓர் புகலிடத்தினையும் உருவாக்குகிறது.

இவ்வனமானது எமது நாட்டின் விலைமதிப்பற்ற சுற்றுச்சூழல் அமைப்புக்கள் மற்றும் அதன் உயிர் ஜீவிகளின் பாதுகாப்பில் Heritance Kandalama கொண்டுள்ள அர்ப்பணிப்பிற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இவ்வனச்சோலையின் பசுமைமிகு நிலப்பரப்புக்குள் ஒற்றுமையுடன் செழித்து வளரும் உயிரினங்களின் பல்வகைத்தன்மை மேலும் விரிவடைகிறது.

இங்கு வருகை தருவோர் 64 வகையான வண்ணத்துப்பூச்சிகள் மற்றும் 183 வகையான உள்நாட்டு மற்றும் புலம்பெயர்ந்துள்ள பறவை இனங்களுடன் மேலும் மாறுபட்ட வண்ணமயமான அழகிய பின்னணியை உருவாக்கிடும் 128 வகையான நம் நாட்டு பூர்வீக தாவரங்களின் தோற்றத்தை கண்டுகளிக்கலாம். இவ்வனப்பிரதேசத்தின் அண்மைக்கால விரிவாக்கமானது 19 ஊர்வன வகைகளுக்கும் சில அரிதான மற்றும் அழிந்து வரும் உயிரினங்களுக்கும் மற்றும் 17 வகையான பாலூட்டிகளுக்கும் பாதுகாப்பான வாழிடமாகவும் சுற்றித்திரியும் பிரதேசமாகவும் விளங்குகிறது. மேலும் சாம்பல் நாரை, நீலவால் பஞ்சுருட்டான், சின்ன மீன்கொத்தி ஆகியவையும் இங்கு வாழ்கின்றன. மேலும் குடுமிப் பருந்து, செம்பருந்து மற்றும் சாம்பல் தலை மீன்பிடிக் கழுகு போன்ற வேட்டையாடும் பறவைகளையும் இவ்வனம் கொண்டுள்ளது.

இந்தச் சரணாலயத்தில் 11 பாதுகாப்பான இயற்கை நீரோடைகள் குறுக்கே அமைந்துள்ளன. இது உள்நாட்டு சுற்றுச்சூழல் அமைப்பில் நிலைத்து வாழ்ந்திடும் தரைத் தோற்றத்தினைக் கொண்டுள்ளதுடன், கந்தளம வாவிக்கும் வளமளிக்கிறது. இந்த நீர் வளங்கள் உயிர் பல்வகைமையை செழிப்பாக்குவதுடன் வனத்தினுள் வாழும் உயிரினங்களுக்கு வாழ்வாதாரமாகவும் அமைகிறது.

"Heritance Kandalamaவினால் மேற்கொள்ளப்படும் இந்த உயிர்பல்வகைமையைக் கொண்ட சோலைவனத்தின் விஸ்தரிப்பானது சுற்றுச்சூழல் நிலைத் தன்மை மீது நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு சிறந்த உதாரணம் ஆகும். இந்நிலப்பரப்பின் பாதுகாப்பில் முதலீடு செய்தல் மூலம் "Heritance Kandalama ஆனது தொடர்ந்தும் தனித்துவமிக்க செழுமையான விருந்தோம்பல் மற்றும் இயற்கைப் பாதுகாப்பு என்பவற்றுக்கு இடையே ஓர் சமநிலைத் தன்மையை பேணுகிறது. மேலும் இத்தொழிற்துறையில் மாபெரும் அளவில் ஈர்க்கப்படும் நிலைத்திருக்கும் சுற்றுலாத்துறை மற்றும் சூழல் சார் விடுதிகளின் செயற்பாடு என்பவற்றுக்கான ஓர் மாதிரியையும் இது உருவாக்குகிறது. புதிதாக விஸ்தரிக்கப்பட்டுள்ள இச்சரணாலயத்தின் இயற்கை அழகு மற்றும் செழுமைமிகு உயிர்ப்பல்வகைமை கண்டு அனுபவிக்குமாறு விருந்தினர்களையும் சூழல் சார் சுற்றுலாவில் நாட்டம் கொண்டுள்ளோரையும் "Heritance Kandalamaஅன்புடன் அழைக்கிறது.' என Aitken Spence Hotel Managements Pvt (Ltd).இன் தலைவர், ஸ்டஷானி ஜயவர்தன தெரிவித்தார்.

# கபில்வத்தை திருத்தலத்தில் இந்திய சுவாமிகள் குபேரகுருஜீ ஆனந்த் தலைமையில் வழிபாடுகள்







பிரபல இந்திய பணவளக் கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த், சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினருடன் ஆதி கதிர்காமம் என அழைக்கப்படும் கபில்வத்தை யாத்திரையில் பங்கேற்றார்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான 40 பக்தர்கள் அடங்கிய குழுவினர் இதில் பங்கு பங்கேற்றனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் உபதலைவர் மனோகரன் ஏற்பாட்டில் நமசிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலில் தியாகராஜா ஜீ, சமய ஆர்வலர்களான வி.ரி.சகாதேவராஜா, கே.ஜெயசிறில் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பிராந்தியங்களில் இருந்து இந்த நாற்பது அடியார்களும் பங்கேற்றிருந்தனர்.

செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை இரு தினங்களும் கபில்வத்தையில் தங்கியிருந்து யாகம், மரகதலிங்க அபிஷேகம், நள்ளிரவு வேள்வி, உபந்நியாசம் போன்ற விசேட அம்சங்களுடன் வழிபாடியற்றினார்கள்.

கடந்த வியாழக்கிழமை அனைவரும் வீடு திரும்பினார்கள்.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# Allianz Lanka நிறுவனத்தின் நிட்டம்புவ கிளை இடமாற்றம்



இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றும், உலகளாவிய Allianz SE குழுமத்தின் அங்கத்துவம் பெற்றதுமான Allianz Lanka நிறுவனம், நிட்டம்புவவில் உள்ள தனது கிளையை இடமாற்றம் செய்கின்றது.இந்நிறுவனத்தின் புதிய கிளையானது நவீன வசதிகள் மற்றும் வடிவமைப்பைக் கொண்டுள்ளதோடு, வாடிக்கையாளர் வரவேற்பு இடங்களில் தடையற்ற உலகத் தரம் வாய்ந்த சேவைகளை வழங்குவதற்கு இசைவாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த புதிய கிளையில் Allianz இன் ஆயுள் மற்றும் பொதுகாப்புறுதி பிரிவுகள் இயங்கும்.

கடந்த ஜூலை 5 ஆம் திகதி இடம்பெற்ற விசேட விழாவின் போது புதிதாக இடமாற்றப்பட்ட கிளை திறக்கப்பட்டது. Nittambuwa இலக்கம் 570C, Colombo Rd, Nittambuwa இல் பரந்த வாகனத் தரிப்பிடத்துடன் இலகுவாக அணுகக்கூடிய வகையில் கிளை அமைந்துள்ளது.

Allianz Insurance Lanka Limited பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இலங்கைக்கான முகாமையாளர் அலன் ஸ்மீ, Allianz Life Insurance Lanka Limited இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜயலால் ஹேவாவசம், பிரதம விநியோக அதிகாரி ரங்க டயஸ், தேசிய விற்பனைத் தலைவர் ஜயநாத் அல்விஸ், முகவர் நிறுவனத்தின் தலைவர் சமில அமுனுகம, மற்றும் தலைவர்_சந்தைப்படுத்தல் கசுன் யட்டவர ஆகியோர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

இந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் இலங்கைக்கான முகாமையாளருமான அலன் ஸ்மீ நிறுவனத்தின் கிளை இடமாற்றம் குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். "இன்றைய போட்டிச் சந்தையில் நிலையான வர்த்தகநாம அனுபவத்தை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

எனவே, நாம் எமது கிளை அனுபவத்தை தரப்படுத்துவதன் மூலம், எமது இருப்பை வலுப்படுத்த முயற்சிப்பதோடு, எமது வாடிக்கையாளர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த காப்பீட்டு சேவைகளை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பையும் வலுப்படுத்துகிறோம்" என்று அவர் கூறினார்.

Allianz Life Insurance Lanka Limited பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெயலால் ஹேவாவசம் கருத்து தெரிவிக்கையில், "Allianz Lanka இல், இணையற்ற வாடிக்கையாளர் சேவை மற்றும் சிறந்த காப்புறுதி தீர்வுகளை வழங்குவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம்" என்றார்.

Allianz Lanka என கூட்டாக அறியப்படும் Allianz Life Insurance Lanka Ltd. மற்றும் Allianz Insurance Lanka Ltd. ஆகியவை ஜெர்மனியின் Munich நகரைத் தலைமையிடமாகக் கொண்ட காப்புறுதி மற்றும் சொத்து மேலாண்மை வணிகங்களில் முதன்மையாகச் சேவைகளைக் கொண்ட உலகளாவிய நிதிச் சேவை வழங்குநரான Allianz SE க்கு முழுச் சொந்தமான துணை நிறுவனங்களாகும்.

# தேசிய நலனுக்காகப் பாடுபடுவதற்கு இன்றைய நாளில் உறுதிகொள்வோம்!

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72 ஆவது ஆண்டு நிறைவு இன்று: கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி வாழ்த்துச் செய்தி

தேசிய சுதந்திரப் போராட்டத்துக்காக இளைஞர்கள், முதியோர்கள் என்ற எவ்வித பேதமுமின்றி அனைவரையும் இணைக்கும் நோக்கில் 1934 இல் எஸ்.டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்காவின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்ட சிங்கள மகா சபை என்ற தேசப்பற்றுள்ள அமைப்பின் கருவறையிலிருந்து பிறந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது எழுபத்திரண்டாவது ஆண்டு நிறைவை இன்று கொண்டாடுகிறது.

இலங்கையர்களாகிய எம்மிடம் இருந்த உன்னதமான குணங்கள் அனைத்தும் எம்மை விட்டு மெல்ல மறைந்து வருகின்றன. சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் நாம் எங்களிடம் இருந்த அனைத்து மதிப்புமிக்க பண்புகளை இழந்துள்ளோம். இதற்கெல்லாம் காரணம் தேசப்பற்றுள்ள முற்போக்குத் தலைவர்கள் இல்லாத அரசால் இதுவரை நடந்த முறையற்ற ஆட்சியாகும்.

அதனால்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான முற்போக்கு அரசாங்கம் நாட்டில் இயங்கிக் கொண்டிருந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த அனைத்து அரசாங்கங்களையும் கவிழ்க்க ஏகாதிபத்தியவாதிகள் முயற்சித்தனர். ஒரு நாடு என்ற ரீதியில் நாம் ஏதேனும் வெற்றியைப் பெற்றிருந்தால் அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் தான். என்பதை மீண்டும் நினைவுகூர வேண்டும்.

1956 ஆம் ஆண்டு மக்கள் வெற்றியுடன் நாட்டில் நடைமுறைப்படுத்த முயற்சித்த அனைத்துத் திட்டங்களையும் பண்டாரநாயக்கவை கொலை செய்து நிறுத்துவதற்கு முயன்றது முதல் சம்பவம். பஸ் தனியார்மயமாக்கல், திருகோணமலை துறைமுகம், கட்டுநாயக்கா விமான நிலையம் கையகப்படுத்துதல், ஊழியர் சேமலாப நிதியத்தை ஸ்தாபித்தல், நெல் சட்டமூலம் கொண்டு வருதல், தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் கொண்டு வருதல் போன்ற மக்கள் சார்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஏகாதிபத்தியவாதிகளை திருப்திப்படுத்தவில்லை என்பதை பின்னர் உணர்ந்தோம். பண்டாரநாயக்காவின் படுகொ



லையின் பின்னர் கட்சியின் பொறுப்பை ஏற்று சிறிமாவோ பண்டாரநாயக்கா உலகின் முதல் பெண் பிரதமரானார். அவரையும் சரியாகச் செயல்பட அனுமதிக்கவில்லை. 1962 இல் இராணுவப் புரட்சி மூலம் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சித்த எதிரிகள் 1971 இல் இளைஞர் கிளர்ச்சியை உருவாக்கி அவரின் பயணத்தை நிறுத்த முயன்றனர்.

அவரது ஆட்சியில் அவர் எடுத்த பல முடிவுகள் இன்றும் உலக முற்போக்குத் தலைவர்கள் அனைவராலும் பாராட்டப்பட்டு வருகின்றன. நடுநிலைமையை உலகுக்கு அறிமுகம் செய்தமை, இந்திய_ சீனப் போரைத் தீர்க்க நேரடித் தலையீடு, சீன இறப்பர் அரிசி ஒப்பந்தம், கச்சதீவுப் பிரச்சினையைத் தீர்த்தல், இந்தியாவுடன் சுமுகமாகத் தீர்க்கப்பட்ட சிறிமா_ சாஸ்திரி ஒப்பந்தம் ஆகியவை முக்கியமானவை.

நாட்டை பொருளாதார ரீதியில் மீளக்கட்டியெழுப்ப அவர் வகுத்த அர்ப்பணிப்பற்ற கொள்கையினால் நாம் பெற்ற உதவிகள் எந்த உலகத் தலைவருக்கும் கிடைக்கவில்லை. இறுதியில் அரசாங்கத்தை கவிழ்க்க உள்நாட்டில் செயல்படுத்தப்பட்ட பல சதிகளை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சி.பி.டி சில்வா சம்பவமும், இடதுசாரி முன்னணி அரசாங்கத்தில் இருந்து வெளியேறியமையும் இவ்வாறான சம்பவங்களுக்கு சில உதாரணங்களாகும்.

உலக வல்லரசுகள் மற்றும் உள்ளூர் ஆட்கடத்தல் காரர்களின் இருப்புக்கு வரலாறு முழுவதும் ஸ்ரீ. ல.சு.க தலைவலியாக இருந்ததோடு பிற்காலத்தில் தலைவர்களுக்கு எதிராக அதைவிட மோசமான சோகங்கள் தொடர்ந்தன. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அதிகாரத்திற்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்டது. சந்திரிகா கூட தனது உயிரை நூலிழையில் காப்பாற்றிக் கொண்டார்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கம் ஆகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனநாயக சோசலிசத்தை தனது அடிப்படைக் கொள்கையாக கொண்டதாகும். எவ்வாறாயினும் தற்போது காணப்படும் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையின் கீழ் இந்த இடது முற்போக்கு முகாம் மிகவும் துரதிர்ஷ்டவசமாக உடைந்து போய் தனிமைப்படுத்தப்பட்ட அணியாக நடவடிக்கைகள் ஈடுபடுவதை அவதானிக்கலாம்.

இதேவேளை தயாசிறி ஜயசேகர (பாராளுமன்ற உறுப்பினர்), பொதுச்செயலாளர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ.ஆர். டி பண்டாரநாயக்கவால் தீவிர லிபரல்வாதத்தால் இந்நாட்டிற்கு உரிமையாக்கப்பட்டிருந்த நாட்டிற்கு பொருத்தமற்ற கொள்கைகளினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் எதிர்காலத்தில் நாட்டிற்கு முகம்கொடுக்க வேண்டிய பல பிரச்சினைகளிலிருந்து நம் மக்களை மீட்கும் நோக்கத்திலேயே இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

இன்று நாட்டின் அனைத்து முற்போக்கு மற்றும் இடதுசாரி முகாமில் உள்ளவர்கள் ஒன்றாக இணைந்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய தேவை முக்கியமாக காணப்படுகின்றது. இதற்கு தலைமைதாங்குவதற்கு இணைவதற்கு நாம் அனைவரும் தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது.

எமது கட்சியின் தலைவர் ஆறாவது நிறைவேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்னிலையாக கொண்டு இந்த தேசிய நலனுக்காக பாடுபடவும்மாற்றத்தை ஏற்படுத்த முன்வருவதற்கும் எமது கட்சியின் 72 ஆவது ஆண்டு நிறைவின்போது நாம் உறுதி கொள்வோம்.

**சந்திரபால லியனகே...**
சிரேஷ்ட ஆலோசகர், தொடர்பாடல் மற்றும் பொதுமக்கள் தொடர்பு
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

# நிலவில் இந்தியா கால்பதித்த சாதனைக்கு காரணம் பிரதமர் மோடி வழங்கிய உத்வேகம்!



## ஆரம்பம் முதலே இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு தோள்கொடுத்து வந்தவர் நரேந்திர மோடி





நிலவின் மேற்பரப்பில் கந்தகம் இருப்பதை சந்திரயான் 3 ரோவர் கண்டறிந்துள்ள நிலையில், அதன் பயன்கள் அதிகம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். நிலவின் தென்துருவத்தில் ஆய்வு செய்வதற்காக சந்திரயான் 3 விண்கலம் கடந்த ஜூலை 14 ஆம் தேதி விண்ணில் ஏவப்பட்டது. இந்த விண்கலத்தில் விக்ரம் லேண்டர், பிரக்யான் ரோவர் உள்ளிட்ட பல கருவிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணியை செய்யும்.

சந்திரயான் 3 கடந்த ஒகஸ்ட் 23 ஆம் திகதி நிலவில் தரையிறங்கியது. சில மணி நேரத்தில் லேண்டரின் சாய்வுதளத்தில் இருந்து 6 சக்கரங்களை கொண்ட பிரக்யான் ரோவர் இறங்கியது. நிலவில் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காக 5 கருவிகள் லேண்டரில் அனுப்பப்பட்டன. அது போல ரோவரில் அல்பா எக்ஸ் ரே ஸ்பெக்ட்ரோமீட்டர் அனுப்பப்பட்டுள்ளது. இது நிலவில் இரசாயனப் பொருட்கள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்யும்.

அதுபோல் தரையிறங்கும் இடத்தில் நிலவில் மண், பாறைகள் இருக்கின்றன என்பதையும் இது ஆய்வு செய்யும். அந்த வகையில் தரையிறங்கிய இடத்திலிருந்து ரோவர் சுற்றி வந்த வீடியோ வெளியானது. லேண்டரில் ரம்பா எனும் கருவி அனுப்பப்பட்டுள்ளது. இது நிலவில் அயனிகள், எலக்ட்ரான்கள் எவ்வளவு இருக்கின்றன, அதன் அடர்த்தி என்ன என்பதை அளவிடும்.

நிலவின் தென்பகுதி குளிர்ச்சியான பகுதி. எனவே இங்கு வெப்பநிலை எவ்வளவு இருக்கிறது என்பதைக் கண்டறியும் கருவியும் அனுப்பப்பட்டுள்ளது. அது போல் நிலவில் நில அதிர்வு ஏற்படுமா என்பது குறித்து ஆய்வு செய்யவும் ஒரு கருவி அனுப்பப்பட்டுள்ளது. இந்த 14 நாட்களும் தற்போது சூரிய வெளிச்சம் நிலவில் படும் என்பதால் ரோவர் சுற்றி சுற்றி புகைப்படம் எடுக்கும்.

அது எடுத்த செய்திகளை லேண்டர் தகவல்களாக பூமியில் இஸ்ரோவுக்கு அனுப்பி வைக்கும். அந்த வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நிலவின் மேற்பரப்பு வெப்பநிலையை ரோவர் புகைப்படம் எடுத்து அனுப்பியிருந்தது. இந்த நிலையில் இரு தினங்களுக்கு முன்னர் நிலவில் அலுமினியம், கந்தகம், கல்சியம், இரும்பு, குரோமியம், டைட்டானியம், மங்கனீஸ், சிலிக்கன், ஒக்ஸிஜன் இருப்பதாக ரோவர் கண்டறிந்துள்ளது. தற்போது ஹைட்ரஜன் இருக்கிறதா என்றும் தேடி வருகிறது.

இவை இருந்தால் அடுத்தது தண்ணீருக்கான தேடலை நோக்கி ரோவர் செல்லக் கூடும். இதுவரை எந்த நாடுகளுமே இது குறித்த ஆராய்ச்சியை கண்டறியாத நிலையில் இந்தியா கண்டுபிடித்துள்ளது. சாதனையாகும். இந்த நிலையில் சல்பரின் (கந்தகம்) பயன்கள் அதிகமாகும். இது ஒரு பூஞ்சை கொல்லி. இது கார் பட்டரி தயாரிக்கவும் உரம் தயாரிக்கவும் பயன்படுகிறது. மேலும் எண்ணெயை சுத்திகரிப்பு செய்யவும் தண்ணீரை சுத்திகரிப்பு செய்யவும் தாதுக்களை பிரித்தெடுக்கவும் உதவுகிறது. இது சிமெந்து, பூச்சி கொல்லிகளை தயாரிக்கப் பயன்படுகிறது.

சல்பர் தோலின் மேற்புறத்தில் உள்ள அதிகளவு எண்ணெயை உறிஞ்சும். முகப்பருக்களை எதிர்த்துப் போராடும். தோல் நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது. சீரண சக்தியை அதிகரிக்கவும் குடற்புண்ணால் ஏற்படும் நெஞ்சு எரிச்சலை குறைக்கவும் உதவுகிறது. சல்பர் குளோரோபில் உற்பத்திக்கு தேவையானது. ஒட்சிசன் இருப்பதால் மனிதன் உயிர் வாழ முடியும் என்ற நிலையில், இந்த சல்பர் இருப்பதால் செடிகளில் குளோரோபில் உற்பத்திக்கு உதவுமென்று நம்பப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க, சந்திரயான் திட்டங்களுக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் உணர்ச்சிபூர்வமான தொடர்புகள் இருப்பதாகவும் சந்திரயான் 3 வெற்றிக்காக பிரதமர் மோடிக்கு பாராட்டு தெரிவிப்பதாகவும் இந்திய மத்திய அமைச்சரவை தீர்மானம் தெரிவித்துள்ளது. பிரதமர் மோடிக்கு பாராட்டு தெரிவிக்கும் மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு மற்றும் முன்மா



திரியான தலைமைக்காகவும், மனிதநலன் மற்றும் அறிவியல் முன்னேற்றத்திற்கான இந்தியாவின் விண்வெளித் திட்டத்தில் அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காகவும் அமைச்சரவை அவரைப் பாராட்டியுள்ளது.

இந்திய விஞ்ஞானிகளின் திறன்கள் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையும், அவரது இடைவிடாத ஊக்கமும் அவர்களின் உணர்வை எப்போதும் பலப்படுத்தியுள்ளன. ஓர் அரசின் தலைவராக தனது 22 ஆண்டுகளில், முதலில் குஜராத் மாநிலத்திலும் பின்னர் பிரதமராகவும் நரேந்திர மோடி அனைத்து சந்திரயான் திட்டங்களுடனும் உணர்ச்சிபூர்வமான பிணைப்பைக் கொண்டுள்ளார். முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயால் இத்தகைய திட்டத்தின் யோசனை அறிவிக்கப்பட்டபோது அவர் முதலமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

2008 ஆம் ஆண்டு சந்திரயான் 1 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டபோது, இஸ்ரோவுக்குச் சென்று விஞ்ஞானிகளை நேரில் சென்று வாழ்த்தினார். 2019 ஆம் ஆண்டில் சந்திரயான் 2 ஐ பொறுத்தவரை, இந்தியா விண்வெளியைப் பொறுத்தவரை, நிலவின் மேற்பரப்பிலிருந்து மிகக் குறுகிய தூரத்தில் இருந்தபோது, பிரதமரின் சாதுரியமான தலைமைத்துவம் விஞ்ஞானிகளின் உற்சாகத்தை உயர்த்தியது.

அவர்களின் உறுதியை வலுப்படுத்தியது மற்றும் அதிக நோக்கத்துடன் இந்த பணியைத் தொடர அவர்களுக்கு உத்வேகம் அளித்தது.

பிரதமர் நரேந்திர மோடி எப்போதும் அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து வருகிறார். கடந்த 9 ஆண்டுகளில், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை எளிதாக்கும் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. விண்வெளித் துறையைப் பொறுத்தவரை, இந்தியாவில் தனியார் துறை மற்றும் இந்திய புத்தொழில் நிறுவனங்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைப்பதை பிரதமர் மோடி உறுதி செய்தார்.

தொழில்துறை, கல்வியாளர்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் சூழலை உருவாக்கவும், உலகளாவிய விண்வெளிப் பொருளாதாரத்தில் பெரும் பங்கை ஈர்க்கவும் விண்வெளித் துறையின் கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக இன்ஸ்பேஸை நிறுவுவது ஜூன் 2020 இல் தொடங்கப்பட்டது. விண்வெளி உலகில் இந்தியாவின் முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கான ஒரு கருவியாக இது மாறியுள்ளது. இது இளம் இந்தியர்களுக்கு பல வாய்ப்புகளைத் திறந்துள்ளது.

'ஜெய் விக்யான், ஜெய் அனுசந்தன்' என்ற பிரதமர் நரேந்திர மோடியின் அறைகூவலுக்கு சந்திரயான் 3 இன் வெற்றி மிகப்பெரிய சான்றாகும். விண்வெளித் துறை இப்போது உள்நாட்டில் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை மேலும் திறக்க உதவும். அதனால் இலட்சக்கணக்கான வேலைகளை உருவாக்கும் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு வாய்ப்பளிக்கும். இது இந்திய இளைஞர்களுக்கு உலகின் வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பணியில் பங்களித்த ஒவ்வொரு தனிநபரையும் அமைச்சரவை பாராட்டியுள்ளது. சந்திரயான் 3 ஆர்வம், விடாமுயற்சி மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் இந்தியா என்ன சாதிக்க முடியும் என்பதற்கான பிரகாசமான சான்றாகும் என்பதை ஒப்புக்கொள்கிறது.

2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க நாட்டு மக்கள், தங்கள் இதயங்களில் மகிழ்ச்சியும் பெருமிதமும் நிறைந்து தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள் என்றும் அமைச்சரவை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சந்திரயான் 3 திட்டத்தின் வெற்றியிலிருந்து கிடைக்கும் அறிவு மனித சமுதாயத்தின் நன்மை மற்றும் முன்னேற்றத்திற்கு, குறிப்பாக உலகளாவிய தென்பகுதி நாடுகளின் நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தப்படும் என்று சந்தேகத்திற்கு இடமின்றி கூறியதன் மூலம், பிரதமர் நரேந்திர மோடி உலகம் ஒரு குடும்பம் என்ற நமது காலத்தால் அழியாத நம்பிக்கையின் உணர்வை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார். இந்தியாவின் முன்னேற்றத்தின் சுடர் எப்போதும் மற்ற இடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கையை ஒளிரச் செய்யும்.

இவ்வாறு மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

# சிறந்த பரீட்சை முடிவுகளை பெற்றுள்ள CSAS மாணவரை புதிய கோணத்தில் ஊக்குவிக்கிறது





கல்வித்துறையில் முன்னோடியான Colombo School of Arts and Sciences (CSAS) ஆனது முழுமையான கற்றல் மற்றும் சிறந்த சாதனைகளின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. இப்பாடசாலையின் அதிபர் ஷலீகா ஜயலத்தின் வழிகாட்டுதலின் கீழ், CSAS ஆனது மாணவர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் அர்ப்பணிப்போடு செயல்படுவது மட்டுமல்லாது , மிகச்சிறந்த தேர்வு முடிவுகளை பெறும் புதுமையான அணுகுமுறைகளையும் முன்னோடியாகச் செயல்படுத்தியுள்ளது.

மாணவர்கள் அறிவைப் பெறுபவர்கள் மட்டுமல்ல, அவர்களின் சொந்த கல்விப் பயணங்களில் தீவிரமாகப் பங்கேற்பவர்களாகவும் இருக்கும் சூழலை உருவாக்க வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே CSAS இயங்குகின்றது. இந்த தத்துவத்தின் வெற்றியானது சமீபத்தில் ஜூன் 2023 Cambridge Assessment International Education (CAIE) தேர்வுகளில் CSAS மாணவர்கள் அடைந்த சிறந்த முடிவுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்வுகளை எழுதி, தேர்ச்சி பெற்ற ஒவ்வொரு மாணவரும், CSAS இன் உள்ளடக்கிய மற்றும் பலப்படுத்தும் கற்றல் சூழலின் வெற்றிக்கு சான்றளிக்கின்றனர். அதன் அடிப்படையில், IGCSE முதல் GCEAS மற்றும் GCEA வரை, பெரும்பாலான மாணவர்கள் சிறப்பான முறையில் தேர்ச்சியடைந்துள்ளனர். IGCSE பிரிவில், மாணவர்கள் A★ முதல் C வரையிலான தரங்களைப் பெற்றுள்ளனர்.

அவர்களுள் 78% ஆனோர் A★ மற்றும் A தரங்களைப்பெற்று சித்தியடைந்துள்ளனர். அத்தோடு, தரம் 11 GCEAS இல் பெறப்பட்ட பெறுபேறுகள் பாராட்டுக்குரியவை. 100% மாணவர்கள் A★ மற்றும் B ஆகிய தரங்களுக்கான மதிப்பெண்களைப் பெற்றதோடு, 34% மாணவர்கள் சிறந்த தரங்களைப் பெற்றுள்ளனர். தரம் 12 பிரிவில், அனைத்து க.பொ.த. பரீட்சார்த்திகளும் 40% க்கு மேல் புள்ளிகளைப் பெற்று, 77% ஆனோர் A★ முதல் C வரையிலான தரங்களை பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக CSAS இன் அதிபர் ஷலீகா ஜயலத் விளக்கமளிக்கையில், “ஒரு சாதகமான கற்றல் சூழலை வழங்குவதற்கும் தனிப்பட்ட முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்கும் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு இந்த சிறந்த பெறுபேறுகளில் பிரதிபலிக்கின்றது. ஒவ்வொரு மாணவருக்கும் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புகள் பல இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். அத்தோடு, திறமைக்கு அப்பால், ஒவ்வொரு மாணவரும் சிறந்து விளங்க பலப்படுத்தப்பட வேண்டும்" என்றார்.

அதிபர் ஜயலத் மேலும் விளக்கமளிக்கையில், “எமது அணுகுமுறையானது, வெறும் பெறுபேறுகளை மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல், வாழ்க்கைக்கான அறிவைத் தழுவிக்கொள்ளும், சுயமாகச் செயல்படும் மாணவர்களை வளர்க்கிறது. எமது தொடக்க முகாம் இந்த தத்துவத்தை உள்ளடக்குகின்றதோடு, கல்வியை மீறிய வெற்றி சார் மனநிலையை வளர்க்க முயற்சிகளை மேற்கொள்கின்றது. நாங்கள் வகுப்புக்களை பரிந்துரைக்க மாட்டோம். சுதந்திரமான கற்றலை நம்புகிறோம். நாங்கள் எமது மாணவர்களை சுயமாக சிந்திக்கவும், அவர்கள் வெற்றிபெற உதவும் வகையில் வலுவான பணி நெறிமுறையை வளர்த்துக் கொள்ளவும் பயிற்சி அளிக்கிறோம்"என்றார்.

# ஆத்மீகத் துறைக்கு அளப்பரிய பங்காற்றிய பெருந்தகை செய்குனா அப்பா (ரஹ்) அவர்கள்

பேருவளை பீ.எம். முக்தார்

தென்னிந்தியா, முத்துப்பேட்டையைச் சேர்ந்த ஆத்மீக ஞானி மர்ஹூம் மௌலானா மௌலவி அல்ஹாஜ் அஹும்மது லெப்பை ஆலிம் (ரஹ்) அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்த கத்தமுல் குர்ஆன் தமாம் மஜ்லிஸ் பேருவளை சீனன்கோட்டை பிட்டவளை சாதுலியா ஸாவியாவில் நேற்று மாலை கலீபத்துஸ் ஸாதுலி மௌலவி எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெற்றது. இதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இலங்கையிலும் இந்தியாவிலும் புகழ் பூத்த ஆன்மீகப் பெரியாராக விளங்கிய மௌலானா மௌலவி அல்ஹாஜ் அஹும்மது லெப்பை ஆலிம் இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபத்துல் குலபாவாகவும் அதேநேரம் நக்ஷபந்தியா, ரிஃபாயிய்யா தரீக்காக்களின் கலீபாவாகவும் திகழ்ந்து ஆத்மீகத் துறையில் அளப்பரிய பணியாற்றியுள்ளார். 'செய்குனா அப்பா' என சிறப்



பாக அழைக்கப்படும் இவர், இந்தியாவின் முத்துப்பேட்டையில் கி.பி. 1856இல் பிறந்துள்ளார்கள்.

சிறு வயது முதல் இவருக்கிருந்த ஆத்மீகத் துறை ஆர்வம் காரணமாக கேரள மாநிலத்திற்குச் சென்று அங்குள்ள உலமாப் பெருந்தகைகளிடம் சன்மார்க்கக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தார்கள்.

தொடர்ந்தும் கல்வி பெறும் ஆவலில் மக்கள் மக்கா நகருக்குச் சென்று அங்குள்ள மத்ரஸத்துல் சவ்லத்தியத்தில் சுமார் பத்தாண்டுகள் தங்கியிருந்து சன்மார்க்கத் துறையில் ஆழமான அறிவைப் பெற்றுக் கொண்டார்கள். பின்னர், மதீனா முனவ்வராவிலும் மேலும் உயர் கல்வியைப் பெற்றுத் தேறினார்கள்.

மக்காவில் முப்தி அஷ்ஷெய்யித் இப்னு ஜைனி தஹ்லான் (ரஹ்), 'ஷெய்குல் இஸ்லாம்' முஹம்மது அப்துல் காதிர் அல் யமனீ உள்ளிட்ட இறை நேசப் பெரியார்கள் பலரிடம் சன்மார்க்கக் கல்வியைப் பெறும், பெரும்பேற்றினையும் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

பின்னர் மக்கா மதரஸாவில் சிறிது காலம் உஸ்தாத்தாகவும் பணியாற்றியுள்ளார். இந்நிலையில் மத்ரஸாவின் பெரியார்களது நல்லாசிகளைப் பெற்று, மக்காவிலேயே திருமணமும் செய்து கொண்டார்கள்.

இதனைப் பெற்றோருக்கும் தெரிவித்தார்கள். ஆனாலும் தன் மகனை நிரந்தரமாக விட்டுப் பிரிந்திருக்க மனமின்றி தாயார், எப்படியும் தன் மகனை வரவழைக்க பல வழிகளிலும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அவற்றுள் ஒன்றாக தனக்கு நன்கு அறிமுகமான இலங்கை தர்கா நகரிலிருந்து ஹஜ் கடமை செல்லும் பாவா ஆலிம் சாஹிப், செய்குனா இஸ்மாயில் ஹாஜியார் ஆகியோருக்கு உருக்கமான கடிதம் அனுப்பி எப்படியாவது மகனை அழைத்து வரும்படி கேட்டுள்ளார்.

செய்குனா இஸ்மாயில் ஹாஜி, மக்காவில் குறிப்பிட்ட செய்குனாவைக் கண்டு பிடித்தார்கள். அவரது உஸ்தாத் அல்லமா அஷ்ஷெய்யித் ஜெய்னீ தஹ்லான் அவர்களிடம் தாயாரின் கடிதத்தை மொழிபெயர்ப்பு செய்து கொடுத்து நிலைமையைத் தெளிவுபடுத்தினார்கள். அதன் விளைவாக மகனை அழைத்து வருவதில் வெற்றி கண்டார்கள். அதுவும் உஸ்த்தாதின் அறிவுரைப்படி நஷ்ட ஈடு கொடுத்து மக்கத்து மனைவியை விவாகரத்துச் செய்த பின்னர் நாடு திரும்பினார்.

பெற்றோரின் விருப்பத்தின் பேரில் அதிராம்பட்டிணத்தைச் சேர்ந்த முஹம்மது மரியம் என்ற பெண்ணை மணந்தார். இத்தம்பதிக்கு 7 ஆண்களும் 3 பெண்களுமாக பத்துப் பிள்ளைகள் பிறந்தார்கள். மர்யம் மரணித்ததன் பின்னர் முஹம்மது சாரா என்ற பெண்ணை மணந்து இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் தந்தையானார். குடும்பச் செலவை சீராக நடத்துவதற்காக இலங்கை வந்து மாணிக்கம் மற்றும் அரிசி வியாபாரத்தில் ஈடுபட்டார்.

மக்காவில் கற்கும் காலத்தில் நட்புக் கொண்ட இலங்கை சீனன் கோட்டை மாணிக்க வர்த்தகரான நெய்னா மரிக்கார் அப்துல் காதிர் ஹாஜியார் மூலமாக இலங்கை வந்து மற்றொரு பெரிய மாணிக்க வியாபாரியான ஹஜ்ஜு மரைக்கார் உமர் லெப்பையின் வீட்டிலே செய்குனா தங்கியிருந்து வர்த்தகத்தைச்



செய்து வந்தார். இச்சந்தர்ப்பத்தில் சீனன் கோட்டை குட்டி மலை பள்ளிவாசலில் 40 தினங்கள் 'கல்வத்' எனும் இறை தியானத்தில் ஈடுபட்டார். பஞ்சு மரிக்கார் ஹஜ்ஜு மரிக்காரின் வபாத்தின் பின்னர், செய்குனா அவர்கள் சீ. எம். எச். சாலிஹ் ஹாஜியார் மற்றும் தர்கா நகரைச் சேர்ந்த செய்கு இஸ்மாயில் ஹாஜியார் ஆகியோரின் வீடுகளில் தங்கியிருந்தார்கள். இறுதிக் காலத்தில் கொழும்பு மாக்கான் மரிக்கார் அவர்களது இல்லத்திலும் தங்கியிருந்துள்ளார். அக்காலத்தில் சென்னை ஜமாலியா அரபிக் கல்லூரி அதிபர் மௌலானா முஹம்மது மதார் ஆலிம் சாஹிப் மற்றும் அங்கு ஆசிரியராகவுள்ள மௌலானா முஹியத்தீன் ஆலிம் சாஹிப் ஆகியோர் செய்குனாவின் மாணவர்களாவார்கள். அதனால் அவர்கள் மூலமாக செய்குனாவின் மேதைத் தன்மையை அங்குள்ள கொடை வள்ளல் ஜமால் முஹிய்யித்தீன் சாஹிப் அறிந்து, செய்குனாவை சென்னைக்கு அழைத்து அவருடன் முத்து வர்த்தகத்தில் ஈடுபட்டார்கள்.

அத்துடன் ஜமாலியாவிலும் செய்குனா அவர்கள் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். பின்னர் அதிராம்பட்டினம் வந்து, தனது வீட்டுத் திண்ணையில் 'அல் மத்ரஸத்துர் ரஹ்மானியா' என்ற பெயரில் மத்ரஸா ஒன்றை நிறுவினார்கள். அங்குள்ள தனவந்தர் களில் ஒருவரான மீ. மு. முஹியத்தீன் அப்துல் காதிர் மரைக்காயர் அங்கும் இலங்கையிலும் மத்ரஸாவின் செயற்பாட்டிற்காக சொத்துக்கள் பல வாங்கி வக்பு செய்தார்கள். அம்மத்ரஸாவில் செய்குனாவிடம் நட்சத்திரக் கணித பாடத்தைக் கற்பதற்கு வெளிநாடுகளில் இருந்தும் பலர் ஆர்வத்தோடு வந்து கற்றுள்ளனர். மக்காவில் ஷாதுலிய்யா தரீக்காவின் பெரியாராக விளங்கிய ஹலரத் அஷ்ஷெய்கு முஹம்மது இப்ராஹிம் மக்கி (ரஹ்) அவர்கள் அதிராம்பட்டினத்திற்கு வந்து செய்குனாவை கலீபத்துல் குலபாவாக நியமித்தார்கள். அதே காலப் பிரிவிலே செய்குனா அவர்கள் நக்ஷபந்தியா, ரிஃபாயிய்யா ஆகிய தரீக்காக்களின் கலீபாவாகவும் விளங்கினார்கள். ஷாதுலிய்யா கலீபத்துல் குலபாவாக சுமார் 40 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்கள்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஷாதுலிய்யா தரீக்காவை வளர்ப்பதற்காக பல ஊர்களுக்கும் சென்று தம் கடமையினைச் சிறப்பாக செய்துள்ளார்கள். சீனன் கோட்டை பிட்டவளயில் 1935ஆம் ஆண்டு 'அல்மிர் அதுஷ் ஷாதுலிய்யா ஸாவியாவை' நிறுவியதோடு தர்கா நகர் ஸாவிய்யத்துல் இப்ராஹிமிய்யாவிலும் தங்கியிருந்து தரீக்கா நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டியுள்ளார்கள். இவரது காலம் ஷாதுலிய்யா தரீக்காவின் பொற்காலமாகவே விளங்கியது.

அதிராம்பட்டினத்திலும் பிட்டவள ஸாவியாவிலும் புனித புகாரி ஷரீப் பாராயணம் செய்யும் வைபவத்தை துவக்கி வைத்தார்கள். இம் மஜ்லீஸ் இங்கு 90 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. மாளிகாஹேன புகாரி தக்கீயாவின் புகாரி மஜ்லிஸிலும் கலந்து சிறப்பித்துள்ளார். சென்னை சட்டமன்ற மார்க்க சீர்திருத்தக் குழுவிலும் ஓர் உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்கள். அங்குள்ள மஜ்லிஸுல் உலமாவின் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்கள். இலங்கையிலும் இந்தியாவிலும் புதிதாக அமைக்கப்படும் பள்ளிவாசல்களுக்கு கிப்லாவை நிர்ணயிக்கும் பணியும் அன்று இவராலேயே நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஹஜ் கடமை குறித்தும் ஹாஜிகளுக்குத் தேவையான அரபு பேச்சு வழக்கு குறித்து தேவையான சொற்றொடர்கள் அடங்கிய அரபுத் தமிழ் 'கிதாபுல் ஹஜ்' எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார்கள். மார்க்க ஞான ஒளி பரப்பிய செய்குனா அவர்களின் அந்திம காலத்தின் பெரும்பகுதி இலங்கையிலே கழிந்துள்ளன. அன்று கொழும்பு உம்மு ஸாவியாவில் நோன்புப் பெருநாள் தொழுகையை செய்குனா அவர்கள் தொழுது, முதல் ஸலாம் கொடுத்தவுடன் மயங்கிக் கீழே சாய்ந்துள்ளார்கள். உடனே மக்கள் அவரைத் தூக்கி வந்து கொழும்பு மாக்கான் மரிக்காரின் இல்லத்தில் சேர்த்துள்ளனர். அங்கு சில நாள் சிகிச்சைக்குப் பின்னர் ஓரளவு உடல் தேறியுள்ளார்கள். பின்னர் தன் சொந்த ஊரான அதிராம்பட்டினத்திற்குச் சென்றார்கள். அங்கு கி.பி. 1945 ஜனவரி 29ஆம் திகதி இவ்வுலகை விட்டும் பிரிந்தார்கள். அன்னாரின் அடக்கஸ்தலம் அதிரை மரைக்கா பள்ளிவளவில் அமைந்துள்ளது.

## சபையில் 6,7,8 இல் விவாதம்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் பாராளுமன்றக் கட்டடத்தில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. எதிர்வரும் 6,7, 8ஆம் திகதிகளில் மேற்படி நம்பிக்கையில்லா பிரேரணையை சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாள் விவாதத்தின் இறுதியில், எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பலரும் ஒன்றிணைந்து மேற்படி நம்பிக்கையில்லா பிரேரணை மீதான யோசனையை சபாநாயகரிடம் அண்மையில் கையளித்திருந்தனர். அதற்கிணங்க, அது பாராளுமன்ற நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், 8ஆம் திகதிவரை அமர்வுகள் நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

## நன்கொடை திட்டங்களுக்கான ...

இத்திட்டங்களின் கீழான தனித் திட்டங்களுக்கான உச்ச வரம்பும் ஒட்டுமொத்த நிதி மூலதனமும் 2023 ஜனவரியில் இந்திய அரசாங்கத்தால் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி பங்குடைமை 5 பில்லியன் அமெரிக்க டொலராக காணப்படுவதுடன், இதில் 600 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை அடிப்படையில் வழங்கப்பட்டதாகும். தேவைகள் மற்றும் முன்னுரிமை அடிப்படையிலும் மக்களை மையப்படுத்தியும் மேற்கொள்ளப்பட்டிருந்த திட்டங்கள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வீடமைப்பு, வாழ்வாதார உதவிகள் போன்ற பல்வேறு துறைகளிலும் நாட்டின் பல பாகங்களிலும் பரவிக் காணப்படுகின்றன. 1990 சுவசெரிய அம்பியுலன்ஸ் சேவை, ரயில் பாதை புனரமைப்பு, ஒன்றிணைந்த நீர்நிலை திட்டங்கள், இந்திய வீடமைப்பு திட்டம், மற்றும் யாழ்ப்பாணம் கலாசார நிலையம் ஆகியவை இந்திய அரசாங்கத்தால் இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கியத்துவமிக்க திட்டங்களில் உள்ளடங்குகின்றன.

## இந்து பாரம்பரிய மாதமாக ...

அமெரிக்காவில் பல்வேறு நாடுகளை சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர். இந்தியர்களும் பெருமளவில் பல்வேறு மாகாணங்களில் குடிபுகுந்து வசித்து வருகின்றனர். இந்நிலையில், ஜோர்ஜியா மாகாணத்தில் இந்தியாவைச் சேர்ந்த இந்து அமெரிக்க சமூக மக்கள் அதிகளவில் வசித்து வருவதுடன், அவர்கள் மாகாண வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளனர்.

இதனை கவனத்தில் கொண்டு ஜோர்ஜியாவில் ஒக்டோபர் மாதம், இந்து பாரம்பரிய மாதமாக அறிவிக்க முடிவானது.

இது தொடர்பாக ஜோர்ஜியா மாகாண ஆளுநர் பிரையன் கெம்ப் வெளியிட்ட அறிக்கையில்,

"இந்து பாரம்பரியம், கலாசாரம், மரபுகள் மற்றும் மதிப்புகளை பின்பற்றுவோருக்கு வாழ்வின் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு விலை மதிப்பற்ற தீர்வுகள் கிடைக்கின்றன.

வழிகாட்டுதலுக்காக இந்துமத போதனைகளை தேடி பார்க்கும் கோடிக்கணக்கான தனிநபர்களுக்கு ஊக்கம், பிரதிபலிப்பு மற்றும் ஆழ்ந்த சிந்தனைக்கான ஒரு வளமாகவும் அவை சேவையாற்றுகின்றன" எனத் தெரிவித்துள்ளார்.

உலகில் 100 கோடி பக்தர்களுடன் மற்றும் அமெரிக்காவில் சுமார் 30 இலட்சம் பேருடன் 3ஆவது மிகப் பெரிய மதமாக இந்துமதம் உள்ளதுடன், ஜோர்ஜியா மாகாணத்தின் நலனுக்கு பெரியளவில் துடிப்புடனான இந்து அமெரிக்க சமூகம் பங்காற்றி, அதன் குடிமக்களை செழிப்படைய செய்துள்ளதாகவும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்துமதத்தில் ஒக்டோபர் மாதம் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், இந்துப் பண்டிகைகளான நவராத்திரி மற்றும் தீபாவளி ஆகிய முக்கிய விழாக்கள் இம் மாதத்தில் வருகின்றன. இதனையடுத்து, ஒக்டோபர் மாதத்தை இந்து பாரம்பரிய மாதமாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

## வெளிநாட்டு தூதுவர்களுக்கு ...

மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தலைமையில் நேற்று (01) வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பான கருத்துகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்ததுடன், இது தொடர்பாக அவர்களுக்குள்ள சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் ஆகியோர் பதில்களை வழங்கி தெளிவுபடுத்தினர்.

நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, நீதி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்தன, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி நெரில்புள்ளே, சட்ட மாஅதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம், உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் தூதரகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜதந்திர அதிகாரிகள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நான்கு மாகாணங்களில்...

பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொது மக்களை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, சூரியனின் தென்திசை நோக்கிய இயக்கம் காரணமாக கடந்த ஓகஸ்ட் 28ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் 7ஆம் திகதிவரை இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராக சூரியன் உச்சம் கொடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அநியாயம் நடக்கும்போது...

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை உள்ளிட்ட கட்டுமானப்பணிகள் தொடர்பான வழக்கின் கட்டளை நேற்று (01) வழங்கப்பட்டதுடன், வழக்கின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினருக்கும் மக்களுக்கும் விசேடமாக, குருந்தூர்மலை சம்பந்தமாக நீதிமன்றத்தில் குருந்தூர்மலை விகாரை நிர்வாகத்தின் கோரிக்கைக்கமைவாக வாதாடிய சட்டதரணிகளுக்கும் தமிழினம் உண்மையில் கடமைப்பட்டிருக்கின்றது.

இந்த நேரத்தில் தமிழ் மக்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு தமிழ்த் தேசத்தினுடைய சரித்திரம் மாற்றப்படும் ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்ட நிலையிலையே நெருக்கடிகளின் மத்தியில் அந்த முயற்சியை முறியடிப்பதற்காக நீதிமன்றத்தை கையாண்டு மிக திறமையாக இந்த அநியாயத்தை முதல் தரம் பதிவு செய்தது மட்டுமல்ல, அடுத்த கட்டமாக உலகுக்கு வெளிப்படுத்தும் வகையில் நடந்துகொண்டமை மக்களுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் ஒரு பலத்தை, வெற்றியை கொடுத்துள்ளது. எங்கள் அழிவை மட்டுப்படுத்தப்பட்ட வகையில் குறைக்கலாமென்ற யதார்த்தத்தை இது எடுத்துக் காட்டுகின்றது" எனத் தெரிவித்தார்.

## வெலிக்கடை பொலிஸ் காவலில் இருந்த...

தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளரான திருமதி சுதர்மா நெத்திகுமாரவின் வீட்டில் பணிபுரிந்த பணிப்பெண்ணை படுகொலை செய்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட வெலிக்கடை பொலிஸ் குற்றப்பிரிவின் பொலிஸ் சார்ஜன்ட்கள் இருவரையும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன், இம்மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவெல நேற்று (01) உத்தரவிட்டார்.இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வெலிக்கடை பொலிஸ் குற்றப் பிரிவின் மூன்று புலனாய்வு அதிகாரிகள், சிறையில் அடைக்கப்பட்டனர். குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன், அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும் மேலும் சந்தேக நபர்கள் கைது செய்யப்படவுள்ளதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேகத்துக்குரிய பொலிஸ் உத்தியோகத்தர்களை எதிர்வரும் 11ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்பதால் அவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

இவ்விடயங்களை பரிசீலித்த நீதவான், அந்தக் கோரிக்கை தொடர்பில் பதிவொன்றை செய்த பின்னர் சந்தேகநபர் பொலிஸ் உத்தியோகத்தர்களை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

2023 மே மாதம் 03ஆம் திகதி பணிப்பெண்ணான தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளரான திருமதி சுதர்மா நெத்திகுமாரவின் வீட்டுக்கு வந்த ராஜகுமாரி 2023 மே மாதம் 11ஆம் திகதி சிவில் உடையில் வந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களால் வெலிக்கடை பொலிஸ் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இதன்போதே ராஜகுமாரி விசாரணை என்ற பேரில் அவர்களால் தாக்கப்பட்ட போது ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போது மரணமானார்.

## பஸ் கட்டணம் நான்கு...

போக்குவரத்துத்துறை சார்ந்த பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தையொன்று நடைபெற்ற போது, பஸ் கட்டணத்தை 4 வீதத்தால் அதிகரிக்க வேண்டிய அவசியம் தொடர்பாக யோசனை முன்வைக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆகக் குறைந்த பஸ் கட்டணத்தை அதிகரிப்பதில்லையென்ற யோசனையும் இதன்போது முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக இறுதித் தீர்மானமொன்றை எடுத்து, பஸ் கட்டணம் தொடர்பான யோசனையை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## தங்கத்தின் விலையில்...

நேற்று (01) 24 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கத்தின் விலை 1,75,550 ரூபாவாக பதிவாகிய அதேவேளை, 22 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கத்தின் விலை 1,61,000 ரூபாவாக பதிவாகியது.

நேற்று முன்தினம் (31) 24 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கத்தின் விலை 1,77,650 ரூபாவாக பதிவாகியதுடன், 22 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கத்தின் விலை 1,62,900 ரூபாவாக பதிவாகியிருந்தது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தங்கத்தின் விலையானது பாரியளவில் எழுச்சி கண்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தங்க நிலவரத்தின்படி,
தங்கம் அவுன்ஸ் விலை ரூ. 6,21,995,
24 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கத்தின் விலை – ரூ.1,75,550
22 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கத்தின் விலை – ரூ.1,61,000
21 கரட் 8 கிராம் (ஒரு பவுண் ) தங்கத்தின் விலை – ரூ.1,53,650

## புதிய வாகன விற்பனையில்...

புதிதாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதையடுத்து, வாகன உதிரிப்பாகங்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்து, அவற்றை பயன்படுத்தி, உள்நாட்டில் தரமற்ற வாகனங்களாக ஒழுங்கமைத்து, அவை போலி ஆவணங்களுடன் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்ட இரண்டு ஜீப் ரக வண்டிகள் குருநாகலில் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். குருநாகலிலுள்ள கோடீஸ்வர வர்த்தகரொருவர், இந்த வாகனங்களை கொள்கலனொன்றில் இலங்கைக்கு இறக்குமதி செய்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அந்த வாகனங்களுக்கான அனைத்து ஆவணங்களும் போலியானவையெனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## வடக்கின் உற்பத்திகளுக்கு தென்...

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் கைத்தொழில் கண்காட்சி நேற்றுக் (01) காலை ஆரம்பமானது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, கடற்றொழில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜன் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சி நாளை (03) ஞாயிற்றுக்கிழமைவரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறுகிறது.

இலங்கையிலுள்ள 20 தொழிற்சாலைகளிலுள்ள 300க்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்களில், புத்தாக்கங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பல புதிய தொழில்கள் மற்றும் வடமாகாணத்துக்கே உரித்தான பல கைத்தொழில்களை Industry 2023 யாழ்ப்பாண பதிப்பு தொழில் கண்காட்சியில் காணக்கூடியதாக வுள்ளது.

## எரிபொருள் QR நடைமுறை...

QR நடைமுறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து இந்த நடைமுறையை பேணி வந்த நிலையில், பல்வேறு தரப்பிலிருந்து விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்த நடைமுறையை நீக்கி, எரிபொருள் விற்பனையை இயல்பு நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறைசார்ந்த தொழிற்சங்கங்களும் கேட்டுக்கொண்டன.

இந்நிலையில், விரைவில் QR நடைமுறைமை நீக்கப்படுமென்று அண்மையில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்திலும் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில், நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் QR நடைமுறையை நீக்கியுள்ளதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஸ்ரீ ராஜ்நாத் சிங் இன்று...

மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புகளின் போது, இலங்கையுடனான இந்திய பாதுகாப்பு உறவுகளின் சகல அம்சங்களும் மீளாய்வு செய்யப்படவுள்ளன. அத்துடன், நுவரெலியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் பாதுகாப்புத்துறை அமைச்சர் விஜயம் செய்யவுள்ளார்.

அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் சிங்கின் விஜயம், இலங்கையுடன் தற்போதுள்ள மிக நெருக்கமான நட்புறவை மேலும் வலுவாக்குவதில் இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை வலியுறுத்துகின்றது. அத்துடன், பாதுகாப்பு விவகாரங்களில் இரு நாடுகளுக்குமிடையில் காணப்படும் நட்புறவின் நிலைபேறான பிணைப்பை வலுவாக்குவதில் இந்த விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைவதாக, இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு பிரிவின் பத்திரிகை தகவல் திணைக்களத்தினால் நேற்று (01) புதுடில்லியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திமிங்கிலம் வாந்தி துண்டு...

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

நெதகமுவையைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரும், 48 வயதுடைய ஓய்வுபெற்ற, அங்கவீனமுற்ற இராணுவ வீரரும், கலகெடிஹேனையைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிக பெறுமதியான அம்பர் விற்பனை செய்யப்படவுள்ளதாக மேல்மாகாண புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, கம்பஹா குற்றப்புலனாய்வு பிரிவுக்கான பொறுப்பதிகாரி கோசல லியனாராச்சி உள்ளிட்ட குழுவினரே சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

## வெல்லம்பிட்டி ஆட்டோ ...

புளூமெண்டல் ரவியின் போதைப்பொருள் வர்த்தகத்தின் நிதி முகாமையாளரான கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த ஒருவரும் கொலைக்கு உதவிய குற்றத்துக்காகவும் கொலைக்கு நேரடியாக உதவிய குற்றச்சாட்டில் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்ததாகக் கூறப்படும் 17 இலட்சத்து 59 ஆயிரம் ரூபா, புத்தம் புதிய 9 ஸ்மார்ட்போன்கள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள், 21 மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் ஆகியவற்றுடன் லொறிகளுக்குரிய 21 வருமான அனுமதிப்பத்திரங்கள், காப்புறுதிச் சான்றிதழ்கள் மற்றும் பல்வேறு வங்கிப் புத்தகங்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

## வவுனியாவில் 6 பேரிடம் பண...

பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேரே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் பிறிதொருவரிடமிருந்து 3 பவுண் தங்கச் சங்கிலியொன்றையும் இச்சந்தேகநபர் வாங்கியுள்ளார். எனினும், தாம் கனடாவுக்கு அனுப்பப்படாமையைத் தொடர்ந்து, வவுனியா குற்றத்தடுப்பு பிரிவில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தனர்.

இந்நிலையில், விசாரணையை முன்னெடுத்த குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், இச்சந்தேகநபரை கைது செய்து, மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

## எரிபொருள் விலைகள் நேற்று...

ஒட்டோ டீசல் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 341 ரூபாவாகும். சுப்பர் டீசல் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 359 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் விலையும் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 231 ரூபாவென அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# விழிப்புலனற்றோருக்கான வீதி சமிக்ஞை விளக்கு

**அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் மட்டக்களப்பில் திறப்பு**





**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பில் முதலாவது விழிப்புலனற்றோருக்கான வீதி சமிக்ஞை போக்குவரத்து நெடுஞ் சாலைகள் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கிராமிய கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திர காந்தனின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் பந்துல குண வர்தன மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலையில் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சி முனை பிரதான வீதியில் நிர்மாணிக் கப்பட்ட வீதி சமிக்ஞை விளக்கை வைபவரீதியாக திறந்து வைத்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை யினால் நிர்மாணிக்கப்பட்ட வீதி சமிக்ஞை இப்பிரதேசத்திலுள்ள விழிப்புலனற்றோரின் போக்குவ ரத்துக்காக அமைக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த இடத்தில் தரிசனம் விழிப் புலனற்றோர் பாடசாலை மற்றும் உதயம் விழிப்புலனற்றோர் நிலையம் ஆகியன அமையப்பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் இராஜாங்க அமைச்சர்களான சிவனேசத்துரை சந்திரகாந்தன், ஆளுநர் செந்தில் தொண்டமான், வீதி அபிவிருத்தி அதிகார சபை தலைவர் உட்பட அதன் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்ட னர்.

மட்டக்களப்பு கல்முனை நெடுஞ் சாலையில் ஏற்படுகின்ற வாகன நெரிசலை தடுக்கவும் வீதி விபத் துக்களை தடுக்கவும் வீதி சமிக்ஞை விளக்கு உதவுமெனவும் தெரிவிக்கப் படுகின்றது.

## முருகபத்து பாடல்கள் நூல் வெளியீடு



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

முருகபத்து பாடல்கள் நூல் வெளியீட்டு நிகழ்வு மட்டக்களப்பு வேலோடுமலை முருகன் ஆலயத் தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட சித் தாண்டி ஈராளகுளம் பகுதியில் குன் றுகள் நிறைந்து காணப்படுகின்ற மிகவும் பிரசித்திப்பெற்ற ஆலயமாக வேலோடு மலை முருகன் ஆலயம் அமையப்பெற்றுள்ளது.

முருகபத்து பாடல்கள் நூல் வெளி யீட்டு நிகழ்வில் ஆலய நிர்வாகத்தி னர், மற்றும் பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், கவிஞர்கள் என ஏராளமானோர் கலந்து கொண் டிருந்தனர்.

வேலோடு மலை முருகன் பத்து நூல் யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த கவிஞரும் அதிபருமான திருச்செல்வம் தவரத்தினம் அவர்க ளால் எழுதப்பட்டு, ஆலய நிர்வாகத் தினரால் வெளியீட்டு வைக்கப்பட் டுள்ளது.

நூலின் முதல் பிரதியை வேலோ டுமலை முருகன் ஆலய தர்மகர்த் தாவும் ஓய்வுபெற்ற அதிபருமான சுப்பிரமணியம் தியாகராஜா அவர் களுடைய துணைவியார் பெற்றுக் கொண்டார்.

# அக்கரைப்பற்று மத்திய கல்லூரிக்கு அதாஉல்லா எம்.பி விஜயம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) தற்போதைய அபிவிருத்தி தொடர் பில் நேரடியாக ஆராய்வதற் காகவும், எதிர்கால மேலதிக வேலைத்திட்டம் தொடர்பான நட வடிக்கைகளை கலந்துரையாடுவ தற்காகவும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல். எம்.அதாஉல்லா நேற்று பாடசா லைக்கு வருகை தந்ததாக கல்லூரி அதிபர் ஏ.எச்.பௌஸ் (SLEAS) தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அதா உல்லா தனது திடீர் விஜயத்தின் போது, பாடசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு வாழ்த்து தெரிவித்ததுடன், பாட சாலையின் தற்போதைய கள நில வரங்களை கேட்டறிந்து கொண்ட துடன் அவற்றுக்கான தீர்வுகளை உரிய அதிகாரிகளை கொண்டு உட னடியாக நிறைவேற்றுவதாகவும், தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலையின் நீச்சல் தடாகத்தை உடனடியாக மீள திறப்பதற்கான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுடன், எதிர்கா லத்தில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க அதிபர் மேற்கொள்ளும் சகல விதமான நடவடிக்கைகளுக்கு பாடசாலை சமூகம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் பூரண ஒத் துழைப்பு வழங்குவதாக தெரிவித் ததாக அதிபர் ஏ.எச்.பௌஸ் தெரி வித்தார்.

அத்தோடு, கல்வி அமைச்சின் தேசிய மீலாத் விழாவை அக் டோபர் மாதத்தில் இப்பாடசாலை யில் நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருவதாகவும், இப் பாடசாலையின் 75ஆவது வருட நிகழ்வை சிறப்பாக நடாத்தி முடிப் பதற்கு அதிபருடன் இணைந்து பாடசாலை சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

# கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தனியார் வகுப்புகளுக்கு புதிய விதிமுறைகள்



கல்முனை மாநகர சபைக்குட் பட்ட பகுதிகளில் தனியார் வகுப்பு கள் தொடர்பில் புதிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

திகாமட்டுல்ல மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம்.ஹரீஸ் தலைமையில் நேற்று கல்முனை மாநகர சபையில் நடை பெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மா னங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி பாடசாலை நேரங்களில் டியூசன் வகுப்புகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஞாயிறு அஹதியா பாடசாலை நடைபெறும் நேரங்களிலும் டியூசன் வகுப்புகளுக்கு தடை விதிக்கப்பட் டுள்ளது. O/L வரையான டியூசன் வகுப்புகள் மாலை 6.00 மணியுடன் முடிவடைய வேண்டும்

இம்முறை தரம் 5 புலமைப்ப ரிசில் பரீட்சை எழுதும் மாணவர் களுக்கான டியூசன் வகுப்புகளை மாத்திரம் செப்டெம்பர்31 வரை இரவு 9.00 மணி வரை நடத்த நிபந் தனையுடன் அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

A/L டியூசன் வகுப்புகள் யாவும் 6.30 மணியுடன் முடிவடைய வேண்டும்.

அனைத்து டியூட்டரிகளிலும் சுகாதார மற்றும் காற்றோட்ட சூழல் இருக்கவேண்டும். அத்துடன் ஆண், பெண்களுக்கென தனித்தனியான மலசல கூடங்கள், போதிய தளபாட வசதிகள் இருத்தல் வேண்டும். மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் போன்ற தீர் மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர சபை ஆணை யாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் நெறிப் படுத்தலில் நடைபெற்ற இக்கலந் துரையாடலில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, பிரதி ஆணை யாளர் ஏ.எச்.எம் அஸீம், உட்பட துறைச் சார்ந்த திணைக்களங்களின் பிரதிநிகள் மற்றும் தனியார் வகுப்பு நிறுவனங்களின் நடத்துனர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## நீண்ட வரட்சியின் பின்னர் மட்டக்களப்பில் மழை!

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக நிலவிய கடுமையான வரட்சியை தொடர்ந்து நேற்று மாலை நீண்ட இடைவெளி யின் பின்னர் கடும் மழை பெய்தது.

மாலை 7 மணி முதல் 9 மணி வரை தொடர் மழை தொடர்ந்தது. கடும் மழை காரணமாக குளிர்மை யான காலநிலை நிலவி வருகின்றது.

மழை காரணமாக தாழ்நிலங்களில் நீர் தேங்கியுள்ளது.மக்கள் மத்தியில் மகிழ்ச்சியான மனோநிலை ஏற்பட் டுள்ளது.

தொடர்ந்து மழை பெய்யுமென வானிலை அவதான மையம் அறி வித்துள்ளது.

## திருகோணமலையில் பௌர்ணமி தின நிகழ்வு!

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலகத்தின் வாசகர் வட்டத் தின் ஏற்பாட்டில் பௌர்ணமி தின நிகழ்வுகள் அண்மையில் திருகோண மலை நகராட்சிமன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு, வாசகர் வட்டத்தின் தலைவர் கவிஞர். சரவணப ஆனந் தம் திருச்செந்தூரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தின ராக திருகோணமலை நகராட்சி மன் றத்தின் செயலாளர் வெ. இராஜசே கர், சிறப்பு விருந்தினராக சனசமூக உத்தியோகத்தர் எஸ். முரளிதரன், கௌரவ விருந்தினராக ஜின்னாநகர் சன சமூக நிலையத்தின் தலைவர் சாகுல் ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, கவியரங்கம், பேச்சு, பாடல், பொதுஅறிவு உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்வுகள் நடை பெற்றன.

பௌர்ணமி தின சிறப்பு கவியரங் கில் திருகோணமலையின் கவிஞர்க ளான செ. ஞானராசா, அ. அச்சுதன், ஆசிரியர் மதிவதனி, ச.திருச்செந்து ரன் , வானு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நூலகத்தின் பிரதம நூலகர் ந.யோகேஸ்வரன், நூலகர் திருமதி றிம்சான, நூலக உதவியா ளர்கள், ஊழியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

## மருதமுனை ஷம்ஸ் தேசிய பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவு



**பெரியநீலாவணை விசேட நிருபர்**

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை தேசிய மாணவர் சிப்பாய் படையணி மாண வர்கள் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கல்லடி 38ஆவது படைப்பிரிவில் நேற்று நடைபெற்ற மாகாண மட்ட கனிஷ்ட தெரிவுப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவா கியுள்ளனர். பாடசாலையின் தேசிய மாணவர் சிப்பாய் படையணி மாண வர்களுக்கு பயிற்சிகளை வழங்கிய சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் எம். ஜே. தாரிக் மற்றும் பாடசாலை அதிபர் எம்.எம்.எம். ஹிர்பகான் உட்பட பாடசாலை உடற்கல்வி ஆசி ரியர்கள், பிரதி அதிபர்கள் மாணவர் களின் வெற்றிக்கு உறுதுணையாக செயற்பட்ட பாடசாலை கல்விச் சமூகத்தினர், பெற்றோர் அனைவ ருக்கும் பாடசாலை சமூகம் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களை யும் தெரிவித்துள்ளனர்.

## திருகோணமலை -ஹொரவ்பொத்தான பிரதான வீதி விபத்தில் மூவர் படுகாயம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலை ஹொரவ்பொத் தான பிரதான வீதி கன்னியா பகுதி யில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

மன்னாரிலிருந்து திருகோண மலை நோக்கி வந்து கொண்டிருந்த அரச பஸ் கல் குவாரிக்கு அருகில் சுற்றுலா வந்த பஸ் ஒன்று திருப்ப முயற்சித்த போது விபத்துக்குள்ளாகி யது. இதில் மூவர் காயமடைந்துள்ள தாக தெரியவருகின்றது.

இவ்விபத்து நேற்று (01) 11. 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் கம்பஹா பிரதே சத்திலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகள் மூவர் காயமடைந்துள்ள னர்.

கன்னியாவிற்கு சுற்றுலா சென்ற தனியார் பஸ் அவ்விடத்தை தவறிய மையினால் கல்குவாரிக்கு அருகில் திருப்ப முற்பட்டபோது வேகமாக வந்த அரச பஸ் மோதியதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந் துள்ளது.

விபத்து தொடர்பிலான விசார ணைகளை திருகோணமலை உப்பு வெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மூதூர் நகரில் வடிகான்களில் தேங்கும் அழுக்குகளால் நுளம்புகள் பெருகும் அபாயம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் நகர பகுதிகளில் வீதியோரங் களிலுள்ள வடிகான்களில் தேங்கும் அழுக்குகள் காரணமாக நுளம்புகள் பெருகி வருவதாக பொதுமக்கள் பெரும் விசனம் தெரிவிக்கின்றனர். மேலும் நகர் பகுதியில் காணப்ப டும் வடிகால்களில் மண், குப்பை கள், பொலித்தீன் பைகள் என்பன தேங்கி காணப்படுவதால் கழிவு நீர் வடிந்தோட முடியாத நிலை காணப் படுகின்றது. நுளம்புகளின் பெருக்க மும் மிக அதிகரித்து காணப்படுகின் றது. இந்நிலையில் வடிகான்களில் தேங்கியுள்ள அழுக்குகளை முற்றாக அகற்றி கழிவு நீர் வழிதோடக்கூடிய வகையிலும், நுளம்புகள் பெருகாத வண்ணமும் தூய்மையை பேணுமா றும் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வேண்டியுள்ளனர்.

# ஸ்ரீ சீதையம்மன் ஆலய பரிபாலன சபை தலைவராக இராதாகிருஷ்ணன் எம்.பி நியமனம்

**நுவரெலியா தினகரன் நிருபர்**

நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய சீத்தாஎலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலய பரிபாலன சபை தலைவராக மீண்டும் இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சீத்தாஎலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலய பரிபாலன சபையின் 51 ஆவது பொதுச்சபை கூட்டம் நேற்று முன்தினம் (30) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய கலாசார மண்டபத்தில், நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சீத்தாஎலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலய பரிபாலன சபையின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் கடந்த பொதுச்சபை கூட்டறிகை, கடந்த வருட கணக்கறிக்கை, செயலறிக்கை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் சபைக்கு சமர்ப்பித்ததோடு கடந்த வருட நிர்வாக சபை கலைக்கப்பட்டு ஆலய நிர்வாக சபையின் ஆயுட் காப்பாளரான வீ. ஆதிமூலம் தலைமையில் நிர்வாக சபை தெரிவு நடைபெற்றது.

இதன்போது முன்னாள் நிர்வாகசபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஏகமானதாக மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

பொதுச்செயலாளராக பி.லிங்கராஜா, பொருளாளராக எம். யாதவசிவம், உப தலைவர்களாக எஸ்.பாலகிருஷ்ணன், என்.புவனேஸ்வரன், உப செயலாளராக எம் பெரியசாமி, ஜி. கிருஸ்ணகுமார் உப பொருளாளராக ஆர். குணசேகரன் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆயுட் காப்பாளராக வீ. ஆதிமூலம், எல். நேருஜி, ஏ. சந்திரன், எஸ். கணேசன் ஆகியோருடன் காப்பாளராக இரா. பாலகிருஷ்ணன் கர். சுப்பிரமணியன், எம். செல்லையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## போதைப்பொருளுடன் ஒருவர் கைது

**அக்குறணை குறூப் நிருபர்**

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பதென்ன என்ற இடத்தில் பெண் ஒருவரிடமிருந்து 2500 மில்லிகிராம், போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரான பெண்ணின் கணவர் பொலிஸ் பிடியிலிருந்து நேற்று தப்பிச் சென்றுள்ளார்.

கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் கண்டி மாத்தளை பிரதான வீதியில், அம்பத்தென்ன என்ற இடத்தில் சோதனை மேற்கொண்டிருந்த போதே சந்தேகநபரான பெண் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய முச்சக்கரவண்டி வண்டியொன்றை நேற்று சோதனைக்குட்படுத்திய போதே போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

# மலைச்சாரல்

## கம்பளை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை உத்தியோகத்தர்கள் தெரிவு



**அக்குறணை குறூப் நிருபர்**

கம்பளை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி தலைவராக அதிபர் ரகுவரன், துணைத் தலைவராக அசோக், செயலாளர் கார்த்திக்துணை, செயலாளர் தினேஷ், பொருளாளர் ஸ்ரீ வெங்கடேஷ் துணைப் பொருளாளர் :வினோத் பிரசன்னா ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

கம்பளை இந்துக்கல்லூரி அதிபர் ரகுவரன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

நிர்வாக சபை உறுப்பினர்களாக கிரிஜன், துவாரகேஷ், அருண், லோகேஷ், மதிரூபன், மேர்வின் ஆகியோரும் தெரிவாகினர்.

சங்கத்தின் ஆலோசகர்கள் ஜெயபிரகாஷ், சிவரூபன், வதன்,கமலபதி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# மஸ்கெலியா மறே நூக்குவத்தை தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா நூக்குவத்தை தனியார் கம்பனிக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனையடுத்து பொரஸ் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் கணபதி நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

ஹற்றன் தொழிலாளர் தொழில் நீதிமன்றில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே தீர்வு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மஸ்கெலியா நூக்குவத்தை தோட்ட மக்களின் சுமார் 10 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு நேற்று தோட்ட முகாமையாளர் ,தொழிலாளர் தேசிய சங்கத்தின் காரியாலய உத்தியோகஸ்தர்கள், தொழிற்சங்க தோட்ட தலைவர்கள், தொழிலாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமூகமான முறையில் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.







அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் 110 ஆவது ஜனன தின நிகழ்வுகள் அண்மையில் கொழும்பிலும், மலையக பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படங்கள் ஹற்றன் சுழற்சி நிருபர்)

# வடக்கின் உதயம்

## யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் கண்காட்சி



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சி நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த கண்காட்சி யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தலைமையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலய தூதுவர், அதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையிலுள்ள 20 தொழிற்சாலைகளில் 300ற்கும் மேற்பட்ட அரங்குகளில், புத்தாக்கங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பல புதிய தொழில்கள் மற்றும் வடமாகாணத்திற்கே உரித்தான பல கைத்தொழில்களை Industry 2023 யாழ்ப்பாண பதிப்பு தொழில் கண்காட்சியில் காணக்கூடியதாகவுள்ளது.

# இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை கண்டித்து யாழில் போராட்டம்

**யாழ்.விசேட, பருத்தித்துறை தினகரன் நிருபர்கள்**

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை எதிர்த்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளத்தினால் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு யாழ். மாவட்ட செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தில் 23154 கடற்றொழில் புரியும் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் யாழ்.மாவட்ட கடற்பகுதியில் தமது அன்றாட வாழ்வாதாரத்தை மேற்கொள்கின்றனர்.

கடலை நம்பியே தமது குடும்ப வாழ்வை நடாத்துகின்றனர். இந்நிலையில், தற்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையினால் சொல்லொண்ணா துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.




கடந்த காலங்களில், இலங்கை இந்திய மீனவர்கள் பல்வேறு கட்டப் பேச்சு வார்த்தைகளை பல்வேறு இடங்களில் மேற்கொண்டனர். இறுதியல், இவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

இதுதொடர்பாக பல்வேறு போராட்டங்களும் நடைபெற்றன. எனினும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே, இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய அடாவடித்தனமான தொழில் முறையை உடனடியாக நிறுத்தி.

எமது நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை அழித்தும், சூறையாடியும், எமது மீனவர்களின் தொழில் உபகரணங்களை அழித்து செல்வதை உடனடியாக தடுத்து நிறுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இழுவை மடித்தொழிலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் நாம் தொடர் போராட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தனர்

## திரைக்கு வருகிறது "புஷ்பக 27"

**யாழ்.விசேட நிருபர்**

ஈழத்திலிருந்து, தயாரிக்கப்பட்ட தமிழரின் தொன்மையை தேடி செல்லும் முதல் விண்வெளித்திரைப்படமான "புஷ்பக 27" யாழ்ப்பாணத்தில் திரையிடப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளில் மாலை 4.30 மணியளவில் சிறப்பு காட்சியாக இத்திரைப்படம் திரையிடப்படவுள்ளது. எதிர்வரும் காலங்களில் இலங்கையின் ஏனைய இடங்களில் திரையரங்குகளிலும், வெளிநாடுகளிலும் திரையிட நடவடிக்கை எடுத்துள்ளதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

## மன்னாரில் தனிநாயகம் அடிகளாரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு



**மன்னார் குறூப் நிருபர்**

தனிநாயகம் அடிகளாரின் 43 ஆவது நினைவு தினம் நேற்று மன்னாரில் நினைவு அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் பஜார் பகுதியிலுள்ள அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வு மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ். ஜெயபாலன் குரூஸ் அடிகளார்,கலையருவி இயக்குனர் அருட்தந்தை செல்வநாயகம் அடிகளார்,மன்னார் தமிழ் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# யாழ். மத்திய பஸ் நிலையத்தில் 24 மணிநேர சேவை ஆரம்பம்

**யாழ். குறூப், யாழ். விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை முதல் 24 மணிநேர சேவையை வழங்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை வட பிராந்தியத்தின் செயலாற்று முகாமையாளர் லம்பேட்ட தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் 24 மணிநேர சேவையை ஏற்படுத்தவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்பினரின் கவனத்துக்கு இவ்விடயத்தை கொண்டு சென்றதன் பயனாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பயணிகள் போக்குவரத்து சேவையில் நேற்றைய தினம் முதல் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் புதிய மைல் கல்லில் அடியெடுத்து வைத்துள்ளது.

கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தை யாழ். மாவட்டத்திலிருந்து மையப்படுத்தி இலங்கை போக்குவரத்து சபை தமது சேவைகளை முன்னெடுத்து வருகின்றது.

அவை, பகல் வேளைகளிலும் இரவில் ஆகக் கூடுதலாக 10 மணிவரையிலான காலப்பகுதிக்கான அட்டவணை நிரலின் அடிப்படையில் தமது சேவையை மேற்கொண்டு வந்தது.

இந்நிலையில் தற்போது சேவையை 24 மணிநேரமும் மேற்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக நேரக் கணிப்பாளர்கள் மற்றும் ஆளணிகள் குறித்த சேவைக்காக நியமிக்கப்பட்டு இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் தூர இடங்களிலிருந்து வரும் பயணிகள் இதுவரை காலமும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுவந்தனர்.

தற்போது அதற்கான தீர்வு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் தமது பயணங்களை இலகுவாகவும் தடைகளின்றி மேற்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.




# ஏற்றுமதி பொருளாதார உற்பத்தியில் இலங்கையின் கவனத்தை எடுத்துக் காட்டிய COMPLAST 2023



கொழும்பு, இலங்கை 2023, ஓகஸ்ட் 25: முழுமையான பிளாஸ்டிக் பொருட்கள் கண்காட்சியின் (COMPLAST 2023) 7ஆவது பதிப்பானது, உற்பத்திகள் மூலமான ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் உறுதியான அர்ப்பணிப்புக்கு முக்கிய இடத்தை வழங்கியுள்ளது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்நிகழ்வு, 2023 ஓகஸ்ட் 25 முதல் 27 வரை, கொழும்பில் உள்ள பெருமைமிக்க பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்று வருகிறது. இலங்கையின் பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனம் (PRISL), Smart Expos, Industrial Development Board ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பானது, COMPLAST 2023 கண்காட்சியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு உச்ச பங்களிப்பை வழங்கியுள்ளது. இந்த ஒப்பிடமுடியாத கூட்டாண்மையானது, இலங்கையின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் அதன் ஊக்குவிப்பு தொடர்பான இந்த அமைப்புகளின் கூட்டு முயற்சிகளை அடிக்கோடிட்டுக் காட்டுவதோடு, அதன் உலகளாவிய உற்பத்தி பாதையை மேம்படுத்துகிறது.

'புத்தாக்கத்தை மெருகூட்டுதல், முன்னேற்றத்திற்கு வலுவூட்டல்' எனும் தொனிப்பொருளின் கீழ், தொழில்துறை முன்னேற்றம் தொடர்பான நாட்டின் அசைக்க முடியாத கவனத்தை காட்டும் வகையில் இடம்பெற்ற இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வானது, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரண தலைமையில் இடம்பெற்றது. இந்த திறப்பு விழாவில் விசேட விருந்தினர்களாக, இலங்கைக்கான இந்திய துணை உயர் ஸ்தானிகர் கலாநிதி சத்தியஞ்சல் பாண்டே உள்ளிட்ட கௌரவ பிரமுகர்கள் மற்றும் அதிதிகள் கலந்து கொண்டதோடு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். சர்வதேச ஒத்துழைப்புகளை வளர்ப்பதிலும் தொழில்துறை வளர்ச்சியை முன்னெடுப்பதிலும் இந்நிகழ்வு முக்கியத்துவம் வழங்கியுள்ளதை இது பிரதிபலிக்கிறது.

சிறந்த வெளியீட்டை வழங்கக் கூடிய மூன்று நாட்களில் இடம்பெறும் இந்த நிகழ்வானது, தொழில்துறையின் வேகத்தை ஒப்பிட முடியாத அளவிற்கு உயர்த்தும் அதே வேளையில், இது ஐந்து கண்காட்சிகளை காட்சிப்படுத்துகிறது.

அவையாவன, RUBEXPO 2023: சர்வதேச இறப்பர் எக்ஸ்போவின் 4ஆவது பதிப்பு. இது இறப்பர் கைத்தொழிலில் ஒருங்கிணைந்த பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் தயாரிப்புகளின் பரந்த வரிசையை காட்சிப்படுத்துகிறது. COMEXPO 2023: முழுமையான உற்பத்தி கண்காட்சியின் 4ஆவது பதிப்பு இதுவாகும். அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளை வழங்குவதன் மூலம் உற்பத்தித் துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. TOFAS 2023: ஆரம்பக் கருவிகள் மற்றும் வேகமாக்கிகள் கண்காட்சி. இது வன்பொருட்கள், கருவிகள், வேகமாக்கிகள், உற்பத்தித் துறைக்கு அத்தியவாசியமான மூலப்பொருட்களை காட்சிப்படுத்துகிறது. MOPEEXPO 2023: உதிரிப் பாகங்கள், டயர்கள், மின்கலங்கள், கராஜ் உபகரணங்களைக் கொண்ட உயர் மோட்டார் வாகன பாகங்களுடன் இம்முறை அறிமுகமாகும் கண்காட்சியாகும்.

இலங்கை வாகன உதிரிப்பாக உற்பத்தியாளர்கள் சங்கம், வாகன தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களின் சம்மேளனம், இலங்கை மோட்டார் உதிரிப் பாகங்கள் முகவர்கள் சங்கம் உள்ளிட்ட முக்கிய தொழில்துறை சங்கங்களிலிருந்து விரிவான ஆதரவை MOPEEXPO கண்காட்சி பெற்றுள்ளது.

இந்நிகழ்வானது, இந்தியா, சீனா, இலங்கை உள்ளிட்ட நாடுகளைப் பிரதிநிதித்துவப்படும் வகையிலான 200 இற்கும் அதிகமான நிறுவனங்களுடன், குறிப்பாக பங்கேற்பாளர்களை கவரக் கூடிய நிறுவனங்களின் பட்டியலைக் கொண்டுள்ளது. இந்த கண்காட்சியில் 50 இற்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள், 80 சீன நிறுவனங்கள், இலங்கை முழுவதிலும் இருந்து 80 இற்கும் மேற்பட்ட உள்ளூர் நிறுவனங்கள் பங்குபற்றுகின்றன.

இந்நிறுவனங்கள் அனைத்தும், தங்கள் புத்தாக்கமான தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை இங்கு காட்சிப்படுத்துகின்றன.

Smart Expos India (Pvt) Ltd நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, பி. சுவாமிநாதன், இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி கருத்து வெளியிடுகையில், "இந்த முக்கியமான கால கட்டத்தில், ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை வளர்ப்பது மிகவும் முக்கியத்துவமானதாகும்.

# இலங்கையில் படைப்பாளர்களுக்கான Community Guidelines பயிற்சி பட்டறைகளை வழங்கும் TikTok



*TikTok அதன் சமூக வழிகாட்டுதல்கள் (Community Guidelines) பற்றிய விழிப்புணர்வையும் புரிந்துகொள்ளுதலையும் மேம்படுத்த இலங்கையில் ஒரு அற்புதமான பிரச்சார நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இந்த முன்முயற்சியின் மையமாக, TikTok தளத்தின் சமூக வழிகாட்டுதல்களைப் பற்றிய படைப்பாளர்களின் புரிந்து கொள்ளுதலை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட தொடர்ச்சியான பயிற்சிப் பட்டறைகளை நடத்துகிறது. அதன் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, பொறுப்பான உள்ளடக்கத்தை உருவாக்கும் நடைமுறைகளை ஊக்குவிக்கும் அதே வேளையில், பாதுகாப்பான டிஜிட்டல் இடத்தை வளர்ப்பதற்கும் அதன் பாவனையாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சிறந்த சூழலை வளர்ப்பதற்கு TikTok இன் அர்ப்பணிப்பு முயற்சிகளை இந்தப் பிரச்சாரம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.*

*TikTok இன் சமூக வழிகாட்டுதல்கள் (Community Guidelines), தளத்தின் பயன்பாட்டை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளை கோடிட்டுக் காட்டும் ஒரு விரிவான கட்டமைப்பாக செயல்படுகிறது. இந்த வழிகாட்டுதல்கள் வளர்ந்து வரும் போக்குகள் மற்றும் ஏற்படக்கூடிய அபாயங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன, மேலும் Online Behaviorsஆல் ஏற்படக்கூடிய அபாயங்களைத் திறம்பட குறைக்க தளத்தை செயல்படுத்துகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் மிகச் சமீபத்திய புதுப்பிப்புகள், உலகெங்கிலும் உள்ள 100 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் TikTok சமூகத்தின் உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து புதுப்பிக்கப்பட்டன.*

*TikTok இலங்கையின் மிகவும் பிரபலமான உள்ளடக்க (Content) படைப்பாளர்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது, அவர்கள் உள்ளடக்கத்தை உருவாக்கி, தளத்தின் சமூக வழிகாட்டுதல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுவார்கள். #SaferTogether என்ற ஹேஷ்டேக்கின் கீழ், பிரச்சாரத்தின் landing page TikTok இல் உள்ள இலங்கை சமூகத்திற்கு அணுகக்கூடியதாக இருக்கும், இந்த சமூக வழிகாட்டுதல்களைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவம் மற்றும் அது எவ்வாறு உதவும் என்பதைப் பற்றி பேசும் தங்களுக்குப் பிடித்த உள்ளடக்க படைப்பாளர்களின் வீடியோக்களைப் பார்க்க முடியும். அவர்கள் வெளியிடும் உள்ளடக்கத்தின் தரத்தை உயர்த்தவும் முடியும்.*

*TikTokஇல் தெற்காசியாவின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாடு மண்டலத் தலைவர் Asma Anjum கூறுகையில், "இந்த முயற்சியைத் தொடங்குவதன் மூலம், இலங்கையில் உள்ள எங்கள் சமூகம் எமது சமூக வழிகாட்டுதல்களைப் பற்றி நன்கு அறிந்திருப்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம். எங்கள் சமூக வழிகாட்டுதல்களைப் பற்றிய விரிவான புரிந்து கொள்ளுதலுடன் அவர்களுக்கு வலுவூட்டுவது TikTok இல் பாதுகாப்பான மற்றும் நேர்மறையான இடத்தை வளர்ப்பதில் முக்கியமானது, அங்கு படைப்பாளிகள் ஆக்கப்பூர்வமான வெளிப்பாட்டு சுதந்திரத்தை அனுபவிக்க முடியும். இந்த பிரச்சாரத்தின் மூலம், ஆக்கப்பூர்வமாக செழுமைப்படுத்துவது மட்டுமல்லாமல், எங்கள் சமூகத்தின் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் உள்ளடக்கத்தை உருவாக்குவதற்குத் தேவையான அத்தியாவசிய அறிவு மற்றும் கருவிகளை எங்கள் படைப்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்." என்றார்.*

# ஜோசப் ஃப்ரேசரின் பேத்தியான பட்ரீசியா மொல்லாய், நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில் மருத்துவமனைக்கு விஜயம்

புகழ்பெற்ற மகளிர் மற்றும் சிறுவர் மருத்துவமனையான ஜோசப் ஃப்ரேசர் நைன்வெல்ஸ் மருத்துவமனை அதன் 100 ஆண்டுகால பாரம்பரியத்தை நினைவுகூரும் வகையில், அந்த மருத்துவமனையின் பெயருக்கு காரணமான ஜோசப் ஃப்ரேசரின் பேத்தியான பட்ரீசியா மொல்லாய் அவர்கள் மருத்துவமனைக்கு வருகை தந்து சிறப்பித்துள்ளார். 2023 ஆகஸ்ட் 24 ஆம் திகதி, இந்த இதயத்தை வருடும் மறக்க முடியாத தருணத்தைக் குறிக்கும் வகையில் விசேட நிகழ்வொன்று இடம்பெற்றதுடன், இது இலங்கையில் மகளிர் மற்றும் சிறுவரின் சுகாதாரப் பராமரிப்புக்கான மருத்துவமனையின் அர்ப்பணிப்பை வலுப்படுத்தவும், அதன் ஸ்தாபக நோக்கத்திற்கு கௌரவம் செலுத்தவும் உதவியது. மறைந்த தனது கணவர் ஜோசப் ஃப்ரேசரின் நினைவாக 1923 ஆம் ஆண்டில் கிறிஸ்ஸி ஃப்ரேசர் அவர்களால் இந்த மருத்துவமனை ஸ்தாபிக்கப்பட்ட நூற்றாண்டு விழாவையொட்டியதாக இந்த வருகையும், நிகழ்வும் இடம்பெற்றுள்ளன.



ஜோசப் ஃப்ரேசரின் 4வது, 5வது மற்றும் 6வது தலைமுறையின் வழித்தோன்றல்களை உள்ளடக்கிய அவரது குடும்பத்தினர் புடைசூழ, பட்ரீசியா மொல்லாயின் வருகை இந்நிகழ்வுக்கு குடும்ப உறவின் உணர்வைச் சேர்ப்பித்தது. இந்நிகழ்வில், ஜோசப் ஃப்ரேசர் நைன்வெல்ஸ் மருத்துவமனையின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. தியோ பெர்னாண்டோ மற்றும் ஜோசப் பிரேசர் நினைவகத்தின் அறங்காவலரான திரு. தோமஸ் டேட்வைலர் ஆகியோர் கலந்து கொண்டு, மகளிரின் சுகாதாரப் பராமரிப்பில் ஃப்ரேசர் குடும்பத்தின் நீடித்த அர்ப்பணிப்பைப் பாராட்டி, பட்ரீசியா மொல்லாய்க்கு நினைவுச்சின்னத்தை வழங்கினர்.

நிகழ்வின் மையப் புள்ளியாக மருத்துவமனையின் விசாலமான மற்றும் பசுமையான தோட்டங்களுக்குள் இந்திய நெல்லிக்காய் (நெல்லி) மரக்கன்றொன்று அடையாளமாக நாட்டப்பட்டது. இது வளர்ச்சி, உயிர்ப்பு மற்றும் தொடர்ச்சிக்கான கௌரவத்தின் அடையாளமாக அமையப்பெற்றதுடன், மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு அதிசிறந்த கவனிப்பை வழங்குவதில் ஜோசப் ஃப்ரேசரின் அர்ப்பணிப்புடன் ஆழமாக பின்னிப்பிணைந்த விழுமியங்களாக இவை கட்டிக்காத்து, நிலைநாட்டப்பட்டுள்ளன.

## Samsung இன் Engineerகள் உஷ்ணத்தினைத் தணிக்கவும் கட்டணங்களைக் குறைக்கவும் பயனுள்ள Air Conditioning Tips களை வழங்குகிறார்கள்



பருவகாலநிலை மாற்றத்தினால் தூண்டப்படும் உலகளாவிய வெப்ப அலைகள் மிகத் தீவிரமடைந்து வரும் ஓர் சூழ்நிலையில், Samsung Electronics இன் Engineer கள், Samsung இன் பாவனையாளர்கள் தமது Air Conditioning System என்பன இன்னும் அதிக பயன் தாரக கூடிய வகையில் உபயோகிக்க பல பயனுள்ள தீர்வுகளை வழங்குகின்றனர். இந்நடைமுறை நுண்ணறிவு, energy efficiency, Wind – Free cooling மற்றும் Effective dehumidification போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது. அதிகரித்து வரும் வெப்பநிலையை மேற்கொள்ளவும் மற்றும் Energy தொடர்பான செலவீனங்களை நிர்வகிப்பதற்கான ஒரு Powerful Toolkit யே Samsung உருவாக்குகின்றது.

வெப்பநிலையின் உயர்வு காரணமாக ஈரப்பதம் அதிகரிக்கும் போது நாம் அசௌகரியதினை இடைவிடாமல் உணர முடியும். இச்சவாலை எதிர்கொள்ள, Samsung Engineer கள் உங்களின் Air Conditioner களின் தன்மைகளை உங்களின் உடனடிச் சூழலுக்கு ஏ ற்ற வகையில் வடிவமைக்க பரிந்துரைகளை முன்வைக்கின்றனர். Air Solution R&D Group இன் Jun Hwang எனும் உத்தியோகத்தர் கூறுகிறார், "உங்கள் வீட்டின் சூழ்நிலைகளுக்கு ஏற்ற விதமாக நடைமுறைப் பயனை தெரிவு செய்யவும், Cooling மற்றும் Dry Mode ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், அவை ஒவ்வொன்றும் வெவேறுபட்ட நோக்கங்களுக்காக தொழில்படுகின்றன".

Cooling Mode ஆனது Compressor output ஐ சரிசெய்து, Minimal Energy Expenditure ஊடாக விரும்பிய வெப்பநிலையை அடைவதன் மூலம் Indoor Space ஐ உடனடியாக குளிர்விக்கின்றது.

மாறாக, Dry Mode ஆனது வெப்பநிலையை மாற்றாமல் Humidity ஐ குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கின்றது. இது Indoor Condition நிலைமைகளின் அடிப்படையில் Air Volume மற்றும் Compressor output ஐ மாற்றியமைக்கின்றது. உதாரணத்திற்கு, Target Temperature ஐ அடைந்தாலும் Humidity நீடித்தால், Compressor சுறுசுறுப்பான இயங்கு நிலையில், அதிகப்படியான Humidity ஐ பிரித்தெடுக்கிறது. Dry Mode செயல்திறனை ஆராய்ச்சி ஆதரிக்கிறது இது அதிக Humidity உள்ள சூழ்நிலையில் குளிரூட்டும் பயன்முறையை விட Humidity ஐ பிரித்தெடுக்கின்றது. ஏறத்தாள 2.7 மடங்கு அதிக திறன் கொண்டது,

## தனது மற்றுமொரு கிளையை புத்தளத்தில் திறந்து வைத்து வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தும் சியபத பினான்ஸ்



புத்தளத்தில் புதிதாக திறக்கப்பட்ட மற்றுமொரு கிளையுடன் இலங்கையில் ஒப்பற்ற சேவைகள் மற்றும் நிதி தீர்வுகளை வழங்குவதன் அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க எல்லையை சியபத பினான்ஸ் எட்டியுள்ளது. இவ்விரிவாக்கம், வாடிக்கையாளர்களுக்கு பரந்த சேவையை வழங்கும் தொடர்ச்சியான முயற்சியில் ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கின்றது.

புத்தளம், ஜெயமாவத்தை, குருநாகல் வீதி, இலக்கம் 113/1A இல் அமைந்துள்ள புதிய கிளையை சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, பிரதேச செயலாளருடன் இணைந்து திறந்து வைத்தார். புதிய கிளையின் ஸ்தாபனம் மற்றும் சியபத பினான்ஸின் 18வது ஆண்டு நிறைவும் ஒரே தருணத்தில் இடம்பெற்றிருப்பது, இலங்கை மக்களுக்கான நிதிச் சேவைகள் வழங்குவதை மேலும் உறுதிசெய்து, அவர்களின் எதிர்பார்ப்பை விரிவுபடுத்துவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

புத்தளத்தில் புதிய கிளை திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்பு உரையாற்றிய சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, "தேங்காய் உற்பத்தி, மீன்பிடி கைத்தொழில் ஆகியவற்றுக்கு பெயர் பெற்ற பிரதேசமாக புத்தள நகரம் சிறந்து விளங்குகிறது என்பதனை வலியுறுத்தியதுடன், புத்தளம் சியபத பினான்ஸ் நிறுவனம் கொண்டுள்ள மூலோபாய முக்கியதுவத்தையும் எடுத்துரைத்தார். தொடர்ந்து உரையாற்றிய செனவிரத்ன, உள்ளூர் வணிகங்கள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு துணை புரிவதில் கிளையின் முக்கிய பங்கு குறித்து நம்பிக்கை தெரிவித்தார். பிராந்தியத்தில் உள்ள நிதிச் சேவைகளில் உள்ள இடைவெளியைக் குறைப்பதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தில் கிளை ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தையும் அவர் மேற்கோள் காட்டினார். மேலும் "எங்கள் எல்லையை விரிவுபடுத்துவதற்கும் அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்களுக்கு நிதிச் சேவைகளுக்கான அனுகூலங்களை வழங்குவதற்கும் எங்களின் அர்ப்பணிப்பு உறுதியாக உள்ளது. மேலும் புத்தளம் மக்களின்; தேலைகளைப் பூர்த்தி செய்வதை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்"

## AI-இயங்கும் ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல் தொழில்நுட்பத்தை தழுவிய முதல் தெற்காசிய நாடாக இலங்கை

இலங்கையில் அதிகரித்து வரும் புற்றுநோயாளர்களின் போக்கானது, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. கடந்த காலங்களை பார்க்கும் போது, இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 2005 இல் 13,372 ஆக இருந்து 2019 இல் 31,848 ஆக அதிகரித்துள்ளது. இது 138% எனும் குறிப்பிடும்படியான அதிகரிப்பைக் காட்டுகிறது. உலகளாவிய ரீதியிலும் புற்றுநோய் பதிவுகள் இதே விகிதத்திலேயே உயர்ந்துள்ளன. புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதே புற்றுநோயை எதிர்த்து போராடுவதற்கான மிகவும் பயனுள்ள உத்திகளில் ஒன்றாகும் என, உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட ஏனைய முன்னணி சர்வதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.



ஆரம்பநிலை கண்டறிதல் சிகிச்சை விளைவுகளுக்கு மிகவும் பயனுள்ள வழி வகுப்பதோடு, அதிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது. பல உள்ளக புற்றுநோய்களை கண்டறிவதற்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட, உடலுக்குள் எவ்வித கருவிகளையும் செலுத்த அவசியமற்ற, ஸ்கேனிங் மென்பொருளான Ophtascan இன் நம்பிக்கைக்குரிய புத்தாக்க கண்டுபிடிப்பானது ஒரு புதிய மைல்கல்லாகும். இவ்வாறான வகையில் உள்ளடங்கும் ஒரே மென்பொருளும், காலத்திற்கு அவசியமான வகையில், நேரடியாக பார்வையிடும் ஒரேயொரு ஸ்கேனிங் தீர்வுமான Ophtascan, புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக காணப்படுகிறது.

தெற்காசியாவில் முதன்முறையாக தங்களது முன்னோடியான தொழில்நுட்பத்தை Ophtascan அறிமுகப்படுத்துகிறது. இது செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திர கற்றலின் (Machine Learning) ஆற்றலைப் பயன்படுத்தி பல்வேறு வகையான புற்றுநோய்களை உடலுக்குள் எவ்வித கருவிகளையும் செலுத்தாமல் கண்டறிய உதவுகிறது. நோயாளியின் கருவிழியின் தோற்றத்தை ஆழமாக பகுப்பாய்வு செய்வதன் மூலம், நுரையீரல், சுக்கிலச் சுரப்பி (prostate), மார்பகம், கருப்பை, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்கள் உள்ளிட்ட பல்வேறு உள்ளக புற்றுநோய்களைக் கண்டறிவதில் 98% இற்கும் அதிகமான துல்லியத் தன்மையை இது கொண்டுள்ளது.

மருத்துவ சோதனைகளின் அடிப்படையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுமதியையும், அங்கீகாரத்தையும் Ophtascan கொண்டுள்ளது. அத்துடன், இத்தீர்வானது 4 ஐரோப்பிய நாடுகளிலும் ஆபிரிக்காவின் ஒரு சில பகுதிகளிலும் பயன்பாட்டில் உள்ளது.

# ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியான வெற்றிகளை பெற்று இலங்கை சாதனை

ஆசிய கிண்ணத் தொடரில் பங்களா தேஷுக்கு எதிரான தனது முதல் போட்டியில் 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை அணி தனது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக அதிக வெற்றிகளைப் பெற்று புதிய சாதனை படைத்துள்ளது.

பங்களாதேஷுக்கு எதிரான வெற்றியானது இலங்கை அணி ஒருநாள் சர்வதேச போட்டிகளில் தொடர்ச்சியாக பெறும் 11 ஆவது வெற்றியாகும். இது இலங்கை அணி ஒருநாள் வரலாற்றில் பெற்ற தொடர்ச்சியான அதிக வெற்றிகளாகும்.

முன்னதாக இலங்கை அணி உலகக் கிண்ணத் தகுதிகாண் தொடரில் தோல்வியுறாத அணியாக இருந்ததோடு அதற்கு முன் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இரு ஒருநாள் சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து வெற்றியீட்டி இருந்தது.



இலங்கை அணி இதற்கு முன்னர் 2004 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக 10 போட்டிகளில் வெற்றியீட்டி இருந்ததே சாதனையாகும்.

எனினும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் தொடர்ச்சியாக அதிக போட்டிகளில் வெற்றியீட்டிய உலக சாதனை அவுஸ்திரேலியா வசம் உள்ளது. அந்த அணி 2003 ஜனவரி தொடக்கம் 2003 மே வரை தொடர்ச்சியாக 21 போட்டிகளில் வெற்றியீட்டியது.

இதில் இலங்கை அணியின் பந்துவீச்சு பலமாக இருந்துள்ளதை காணமுடிகிறது. இலங்கை தொடர்ச்சியாக 11 போட்டிகளில் எதிரணியின் அனைத்து விக்கெட்டுகளையும் வீழ்த்த முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது கிரிக்கெட் வரலாற்றில் எதிரணியின் அனைத்து விக்கெட்டுகளையும் தொடர்ச்சியாக அதிக முறை வீழ்த்திய சாதனையாகவும் உள்ளது. முன்னதாக அவுஸ்திரேலிய அணி 2009–2010 காலப் பகுதியில் எதிரணியை 10 முறை சுருட்டியதே சாதனையாக இருந்தது.

கண்டி பல்லேகலவில் கடந்த வியாழக்கிழமை (31) நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 42.4 ஓவர்களில் 164 ஓட்டங்களுக்கு சுருண்டது. நஜ்முல் ஹொசைன் ஷான்டோ தனித்து 89 ஓட்டங்களை பெற்றபோதும் வேறு எந்த வீரரும் அவருக்கு கைகொடுக்கவில்லை.

இலங்கை அணியில் முன்னணி பந்துவீச்சாளர்கள் உபாதையால் விலகிய நிலையில் தனது திறமையை வெளிப்படுத்திய மதீஷ பத்திரண 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை அணி 39 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 165 ஓட்டங்களை எட்டியது. இலங்கை தனது முதல் மூன்று விக்கெட்டுகளையும் 43 ஓட்டங்களுக்கு பறிகொடுத்த நிலையில் சதீர சமரவிக்ரம (54) மற்றும் சரித் அசலங்க (ஆட்டமிழக்காது 62) நான்காவது விக்கெட்டுக்கு 78 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

பி குழுவில் ஆடும் இலங்கை அணி தனது இரண்டாவது போட்டியில் வரும் செவ்வாய்க்கிழமை (5) ஆப்கானிஸ்தானை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி பாகிஸ்தானின் லாகூர் நகரில் நடைபெறவுள்ளது.

## இந்திய – பாக். போட்டியின் டிக்கெட் விலையில் மாற்றம்



ஆசியக் கிண்ணத் தொடரின் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டிக்கான டிக்கெட் விலைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கண்டி – பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்று சனிக்கிழமை (02) இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இவ்வாறான நிலையில் போட்டியை நடத்தும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை டிக்கெட்டுகளின் விலைகளை அதிகமாக நிர்ணயித்திருந்தது.

பல்லேகலை மைதானத்தின் புற்தரை பகுதிகளுக்கான டிக்கெட்டுகள் விலை 9600 ரூபாவாக (குறைந்தபட்ச டிக்கெட் விலை) நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் இந்த விலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், தற்போது இந்தியா – பாகிஸ்தான் போட்டிக்கான புற்தரை பகுதிகளுக்கான டிக்கெட்டுகளை 1500 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்தியா – பாகிஸ்தான் மற்றும் நேபாளம் – இந்தியா அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளுக்குமான டிக்கெட்டுகளை ரசிகர்கள் கொள்வனவு செய்யும் பட்சத்தில் 2550 ரூபாவுக்கு இரண்டு போட்டிகளையும் ரசிகர்கள் பார்வையிட முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## இங்கிலாந்து சென்ற இலங்கை மகளிர் அணி முதல் தோல்வி

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை மகளிர் அணி இங்கிலாந்து மகளிர் அணிக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் டக்வர்த் லுவிஸ் முறையில் 12 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.



ஹோவ்வில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற இந்தப் போட்டி மழை காரணமாக தாமதித்தே ஆரம்பமானது. இதனால் 17 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 186 ஓட்டங்களை விளாசியது. அலிஸ் கெப்சி 27 பந்துகளில் 51 ஓட்டங்களை விளாசியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து பதிலெடுத்தாட களமிறங்கிய இலங்கை மகளிர் அணி 3.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 23 ஓட்டங்களை பெற்ற நிலையில் மழை குறுக்கிட்டது. தொடர்ந்து ஆரம்பமான ஆட்டத்தில் இலங்கை அணிக்கு 6 ஓவர்களில் 68 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்படி 17 பந்துகளில் இலங்கை அணி 45 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது. எனினும் இலங்கை அணி 6 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 55 ஓட்டங்களையே பெற்றது.

இதன்மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் இங்கிலாந்து மகளிர் அணி 1–0 என முன்னிலை பெற்றது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டி20 போட்டி இன்று (2) செய்ம்ஸ்போர்டில் நடைபெறும்.

## இலங்கையின் கட்டழகர் அணி நேபாளம் பயணம்



கட்டுநாயக்க டீ.கே.ஜி. கபில

நேபாளத்தில் நடைபெறும் 55ஆவது ஆசிய உடல் கட்டழகர் மற்றும் பிசிக்ஸ் போட்டிக்காக இலங்கையை பிரதிநிதித்துவம் செய்து பங்பேற்பதற்கு 11 வீர, வீராங்கனைகள் கடந்த வியாழன் (31) அதிகாலை கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றனர். இந்த போட்டிகள் நேபாளத்தின் கத்மண்டு நகரில் நேற்று (1) ஆரம்பமானதோடு எதிர்வரும் திங்கட்கிழமை (7) வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்கு 6 வீரர்கள் மற்றும் 4 வீராங்கனைகள் மற்றும் அதிகாரி ஒருவர் நேபாளம் பயணித்துள்ளனர். அவர்கள் இந்திய விமான சேவையின் ஏ.ஐ. 274 விமானத்தில் கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து இந்தியாவின் புதுடில்லியை நோக்கி பயணித்தனர். அங்கிருந்து அவர்கள் நேபாளம் செல்கின்றனர்.

## இந்தியா–பாகிஸ்தான் அணிகள் இன்று பலப்பரீட்சை: மழை குறுக்கிட வாய்ப்பு



ஆசிய கிண்ண தொடரில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் போட்டி பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இன்று (02) நடைபெறவுள்ளது.

இலங்கையின் பெரும் பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வரும் சூழலில் இன்றைய போட்டியில் மழை குறுக்கிட வாய்ப்பு இருப்பதாக காலநிலை அவதான நிலையத்தின் எதிர்வுகூறல்களில் தெரியவருக்கிறது.

பி.ப. 3 மணிக்கு போட்டி ஆரம்பமாகவுள்ள நிலையில் இன்றைய தினத்தின் பிற்பகுதியில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் கடந்த 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்திற்கு பின்னர் ஒருநாள் சர்வதேச போட்டி ஒன்றில் சந்திக்கவுள்ளது இது முதல் முறையாக அமையவுள்ளது. இரு அணிகளும் இரு தரப்பு கிரிக்கெட் போட்டிகளில் ஆடாத நிலையில் ஐ.சி.சி ஏற்பாடு செய்யும் போட்டிகளில் மாத்திரமே மோதி வருகின்றன.

ஆசிய கிண்ண தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி நேபாளத்தை இலகுவாக வென்ற நிலையிலேயே இன்றைய தினம் களமிறங்குகிறது. சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் ஒருநாள் தரவரிசையில் பாக். அணி முதலிடத்தில் இருப்பதோடு அந்த அணியின் முன்னணி வீரர்கள் லங்கா பீரிமியர் லீக் தொடரில் பங்கேற்றதன் மூலம் ஒரு மாதத்திற்கு மேலாக இலங்கையில் தங்கி உள்ளது சாதகமான ஒன்றாகும்.

மறுபுறம் ரோஹித் ஷர்மா தலைமையிலான இந்திய அணி வழக்கம்போல் வலுவாக அணி ஒன்றுடனேயே ஆசிய கிண்ணத் தொடரில் களமிங்கியுள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இரு அணிகளும் சந்தித்துக்கொள்ளும் போட்டி என்பதால் ஆட்டம் தொடர்பில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. போட்டிக்கான பிரதான டிக்கெட்டுகள் விற்பனை ஆரம்பித்து சில மணி நேரங்களிலேயே விற்றுத் தீர்ந்தன.

## பத்திரணவை பாராட்டிய அஸ்வின்





இலங்கை அணியின் இளம் கிரிக்கெட் வீரர் மதீஷ பதிரணவின் பந்துவீச்சு திறனை பாராட்டி ட்வீட் செய்துள்ளார் இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வின்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய 6 அணிகள் கலந்து கொள்ளும் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இம்முறை போட்டிகள் பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெறுகின்றன. செப்டெம்பர் 17ஆம் திகதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் கலந்து கொண்டுள்ள 6 அணிகளும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்த தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் விளையாடின.

இதில் இலங்கை வீரர் மதீஷ பதிரண, 7.4 ஓவர்கள் வீசி 32 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். அதன் மூலம் பங்களாதேஷ் அணியை 164 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி ஆட்டமிழக்கச் செய்தது இலங்கை அணி.

20 வயதான பதிரண, ஐ.பி.எல் கிரிக்கெட்டில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வருகிறார். இதுவரை 14 ஐ.பி.எல் போட்டியில் விளையாடி 21 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். ஐ.பி.எல் 2023 பருவத்தில் அவர் 19 விக்கெட்டுகளை வீழ்த்தி கவனம் ஈர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

“ஐ.பி.எல் 2023 பருவத்தில் பதிரணவின் செயல்பாடு பாராட்டும் வகையில் இருந்தது. ஆனால், இன்றைய (31) போட்டியில் அவரது செயல்பாடு கடந்த 12 மாதங்களில் அவர் கண்டுள்ள செயல்திறன் மேம்பாட்டை சுட்டிக் காட்டுகிறது” என அஸ்வின் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் பத்து தடகள வீரர்கள் இன்று சீனா பயணம்



சீனாவின் ஹன்ஜோவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியை இலக்கு வைத்து முன் கூட்டி பயிற்சி பெறுவதற்காக இலங்கையின் 6 வீரர்கள் மற்றும் 4 வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர் இருவர் என 12 பேர் கொண்ட குழாம் ஒன்று இன்று (02) சீனா பயணிக்கவுள்ளது.

இந்த பயிற்சி மூன்று வாரங்கள் இடம்பெறவிருப்பதோடு ஆசிய விளையாட்டுப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதன் தடகளப் போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டிக்கான 16 வீர, வீராங்கனைகள் கொண்ட தடகள குழாம் ஒன்றை பங்கேற்கச் செய்ய இலங்கை மெய்வல்லுனர் சங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதோடு தெற்காசியாவின் அதிவேக ஓட்ட வீரரான யுபுன் அபேகோன் உள்ளடங்களாக அந்த அணியில் 8 வீரர்கள் மற்றும் 8 வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர். அந்த குழாத்திற்கு பயிற்சியாளர் மற்றும் முகாமையாளர் என 7 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு இலங்கை சார்பில் 21 விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காக மொத்தம் 97 வீர, வீராங்கனைகள் மற்றும் 57 அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர். இதில் ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் அணிகள் மற்றும் ரக்பி அணியும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் நதீஷா ராமநாயக்க, 800 மீற்றரில் கயன்திகா அபேரத்ன மற்றும் தருஷி கருணாரத்ன மற்றும் 1,500 மீற்றரில் கயன்திகா ஆகியோர் திறமையை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

45 நாடுகள் பங்கேற்கும் இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் மொத்தம் 481 தங்கப் பதக்கங்களுக்காக 12,500 வீர, வீராங்கனைகள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.